மூலிகைத் தாவரங்கள் ஒரு அறிமுகம்

நன்றி

மூலிகைத் தாவரங்கள் குறித்த அறிமுக நூல் விவசாயிகளுக்கு உதவும் நோக்குடன் கையேடாக தயாரிக்கப்பட்டுள்ளது. முதன்மை தலைமைவனப் பாதுகாவலர் திரு. ஜே. சி. காலா இ. வ. ப. அவர்கள் ஆசியுடன் தலைமை வனப்பாது காவலர் (ஆராய்ச்சி விரிவாக்கம் மற்றும் பயிற்சி) திரு. கு. குமாரவேலு இ.வ.ப அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் வனப்பாதுகாவலர் (ஆ) திரு.என். கிருஷ்ணகுமார் இ.வ.ப. அவர்களின் ஊக்குவிப்புடன் வனமரபியல்கோட்ட அனைத்து அலுவலர்களின் ஒத்துழைப்புடன் இக்கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. நல்ல பல கருத்துக்களை வழங்கியதோடு அணிந்துரையும் வழங்கிய தலைமை வனப்பாதுகாவலர் (ஆராய்ச்சி விரிவாக்கம் மற்றும் பயிற்சி) அவர்களுக்கு சிறப்பாக நன்றி கூற கடமைப் பட்டுள்ளேன். நிதி உதவி வழங்கிய பாரம்பரிய மருத்துவ மரபுகள் மறுமலர்ச்சி அறப்பேரவை பெங்களூர் மற்றும் டேனிடா நிறுவனத்தாருக்கும் மற்றும் ஒத்துழைத்த அனைவருக்கும் உளமார்ந்த நன்றி.

சூ.க. சண்முகசுந்தரம் இ.வ.ப
(துணை வனப்பாதுகாவலர்,
வனமரபியல் கோட்டம்,
கோவை)

1163
1963
300 (13)

TNFA - CBE
Centenary Library
19766

அணிந்துரை

ஒவ்வொரு ஆண்டும் பொய்த்துக்கொண்டேயுள்ள பருவமழையின் பயன்குறைவு காரணமாக, தமிழ்நாடு பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாகிவருகிறது. குறிப்பாக கிராமப்புற நிலங்களின் " உற்பத்தி" பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. நீர் பற்றாக்குறையால் விவசாயிகளின் வருமானம் பின்னடைந்து கொண்டே உள்ளது. மற்ற அண்டை மாநிலங்களிடமிருந்து பெற்றுவந்த ஆற்று மற்றும் அணைபிடிப்பு நீர், வருங்காலங்களில் தமிழகத்திற்கு கிடைப்பது அரிது என்பது தெளிவாகிறது. எனவேதான் நீர் தேவை அதிகமுள்ள பயிர்கள் வளர்ப்பதைத் தவிர்த்து, நீர் தேவை குறைவான தாவரங்களை வளர்த்து பயனடைவது சாலச்சிறந்தது.

மாறிவரும் உலகலாவிய பொருளாதாரச் சந்தையிலே, இலாபகரமாக விற்கக்கூடிய நமதுநாட்டிலே மட்டும் வளரவல்ல மூலிகைச்செடிகளை விற்பனை செய்ய வழிவகை செய்தால் தமிழக விவசாயிகள் பயனைடைவர்.

இச்சீரிய கருத்தினை குறிக்கோளாகக் கொண்டு தமிழகவனத்துறை ஆராய்ச்சிப்பிரிவு, மூலிகைகளை இலாபகரமாக வளர்க்கும் வழிமுறைகளை கண்டறிய ஆய்வுகள்மேற்கொண்டுள்ளது. 400க்கும் மேற்பட்ட மூலிகைச் செடிகளை கிழக்குத்தொடர்ச்சி மலையிலிருந்தும், மேற்குத்தொடர்ச்சி மலையிலிருந்தும் சேகரிக்கப்பட்டு ஆராய்ச்சித்தோட்டங்களில் வளர்க்கப்பட்டுவருகிறது.

இதன்முழுப்பயனையும் தமிழக விவசாயிகளும், பொதுமக்களும் பெற்று வளமும், நலமும் பெற்றிட திரு. சு.க. சண்முகசுந்தரம் இ.வ.ப. (துணை வனப்பாதுகாவலர், வனமரபியல் கோட்டம், கோவை) அவர்கள் தொடர்ந்து சீரிய பல முயற்சிகள், ஆர்வத்துடன் இடைவிடாது எடுத்துவருகிறார். மாதம்ஒரு முறை அவரது அலுவலகத்தில் மூலிகை வளர்ப்போரும், வாங்குவோரும் பயன்படுத்துவோரும் கலந்துரையாடி பயன்பெற்று வருகிறார்கள். இது இவருடையமுயற்சியின் வெளிப்பாடு, செயல்பாடாகும்.

மூலிகைத்தாவரங்களை மக்களிடையே முறையாகவும், அறிவியல்ரீதியாகவும் அறிமுகப்படுத்துவதற்காக இப்புத்தகத்தை திரு. சு.க. சண்முகசுந்தரம் இ.வ.ப. வெளியிட்டுள்ளார். இப்புத்தகம் தமிழக விவசாயவளர்ச்சிக்கு சிறிய அளவேனும் பயன்பட்டால், அதுவே பெரிய மகிழ்வைக்கொடுக்கும் செயலாகும். இயற்கை விவசாய முறையில் மூலிகைகளை வளர்த்து இலாபகரமாக விற்று தமிழகவிவசாயிகள் பயனடையவேண்டும் என்பதே எங்கள் குறிக்கோளாகும்.

இச்சீரிய நல்ல முயற்ச்சியை மேற்கொண்டுள்ள திரு. சு.க. சண்முகசுந்தரம் இ.வ.ப. அவர்களை,அவரது முயற்சிக்காகவும் நல்ல எண்ணத்திற்காகவும் பாராட்டுகிறேன்.

கு. குமாரவேலு இ.வ.ப
தலைமை வனப்பாதுகாவலர்
சென்னை

பொருளடக்கம்

1. முன்னுரை 2
2. இயற்கை வளங்கள் மேலாண்மை 3
3. மூலிகைத் தாவரங்கள் பாதுகாப்பு 4
4. உயிர்காக்கும் மூலிகைகள் 6
5. மூலிகைத் தாவரங்கள் - தாவர இனப் பெயர்கள் 20
6. மூலிகையின் எதிர்காலம் 30
7. மூலிகை விவசாயம் மற்றும் உத்திகள் 31
8. மூலிகை வியாபாரம் மற்றும் உத்திகள் 32
9. மூலிகை வளர்ச்சிக்கு உதவும் நிறுவனங்கள் 34
10. மூலிகை வியாபார நிறுவனங்கள் 35
11. மூலிகை படிப்பு - கல்வி நிறுவனங்கள் 37
12. மூலிகை மருத்துவம், தாவரம் பற்றிய நூல்கள் மற்றும் இதழ்கள் 38
13. சட்ட திட்டங்கள் 42
14. உடனடித் தேவைகள் 43
15. தேசிய மூலிகை வளர்ப்பு வாரியம் 46

இணைப்பு

1. ஏற்றுமதி தடைசெய்யப்பட்டவை 49
2. அனுமதியின் பேரில் ஏற்றுமதி செய்யத்தக்கவை 50
3. விற்பனை வரிவிலக்களிக்கப்பட்டவை 51
4. வனஉயிரின சட்டப்படி அனுமதியின்றி வைத்திருக்கக் கூடாத தாவரங்கள் 51
5. அருகிவரும் உயிரினங்கள் வர்த்தக கட்டுப்பாட்டுக் கூட்டமைப்பின் கீழ் உள்ளவை 52
6. மாநில மூலிகைத் தாவரங்கள் வாரியத்துடன் பதிவு செய்வதற்கான விண்ணப்ப படிவம் 53

1. முன்னுரை

உலகில் தோன்றியுள்ள பெரும்பாலான தாவரங்கள் இனங்கண்டு பிடிக்கப்பட்டு பெயரிடப்பட்டு நவீன முறையில் வகைப்படுத்தப்பட்டு தொகுக்கப்பட் டுள்ளன. இருந்த போதிலும், அடையாளங் காணப்படாத தாவரங்கள் பெரும் எண்ணிக்கை உள்ளன. அதோடு பரிணாம வளர்ச் சியின் காரணமாக அனுதினமும் இயற்கை புதியதாக தாவரங்களை தொடர்ந்து உற்பத்தி செய்து கொண்டே இருக்கின்றது. இந்தத் தாவர இனங்கள் அனைத்தும் இறைவன் மனிதனுக்குப் படைத்த வளங்கள். இந்தத் தாவரங்கள் ஏதாவது ஒரு வகையிலாவது மனிதனுக்குப் பயன்படு கின்றன. உணவாக, மருந்தாக, கட்டுமானப் பொருளாக, தொழிற்சாலை மூலப்பொருளாக என்று பல நேரடிப் பயன்பாட்டிற்கு தாவரங்கள் பயன்படுவதோடு கண்ணுக்குப் புலப்படாத வகையில் கரி அல்லது **"கார்பன்"** என்ற வேதிப் பொருளை நிலைப்படுத்தி, உயிர் வாயுவை (ஆக்ஸிஜன்) உற்பத்தி செய்யும் அமுதசுரபியாக விளங்கி, சுற்றுச் சூழல் தூய்மைக்கும். மேம்பாட்டிற்கும் ஆதாரமாக விளங்கும் காற்று, மழை போன்ற இயற்கைச்செயல்பாட்டிற்கு உறுதுனை புரிந்து மனிதன் உள்ளிட்ட அணைத்து உலக உயிரினங்களின் மகிழ்வான வாழ்வினை உறுதி செய்யும் உன்னத உறுப்புகளாகத் தாவரங்கள் விளங்கி வருகின்றன. கண்ணுக்குப் புலப் படாத நுண்ணிய நூலிழை போல ஒரு சமச்சீர் நிலையை தமக்குள் கொண்டு விளங்கும் பஞ்சபூதங்களின் சரியான செயல்பாட்டிற்கு ஆதார மானவை தாவரங்கள் ஆகும்.

இந்தத் தாவர இனங்கள் மதிக்கப்படாமல் மனித வாழ்வில் பல கால கட்டங்களில் பலவாறாக தவறான உபயோகம் செய்யப்பட்டு அழிவுக்கு உள்ளாக்கப்பட்டதன் காரணமாக அவற்றில் பல இனங்கள் எண்ணிக்கையில் குறைந்து, காண்பதற்கு அரிய நிலையை அடைந்து விட்டன. பலஅரிய நிலையை நோக்கி நகர்ந்து வருகின்றன. பல உலகில் இருந்தே மறைந்து விட்டன.

உலகில் தோன்றிய தாவர இனங்களும் உயிரி னங்களே. மனிதனைப் போல அவற்றிற்கும் இவ்வுலகில் வாழ தார்மீக உரிமை உண்டு. அது மட்டுமின்றி இந்தத் தாவர இனங்கள் மனிதனுக்காகப் படைக்கப்பட்ட செல்வங்கள். இந்த உயிரினச் செல்வங்களோடு முரண்படாமல் இயைந்து வாழ்ந்து அவற்றைப் பயன்படுத்த வேண்டுமே அன்றி அவற்றோடு முரண்பட்டு அவற்றை அழிவுப் பாதைக்கு கொண்டு செல்ல மனிதனுக்கு உரிமை யில்லை. தனது மூத்த தலை முறையிடம் பெற்ற இந்தச் செல்வங்களை அடுத்து வரவிருக்கும் தலை முறையினருக்கு முறையாக விட்டுச் செல்லும் கடமைப் பொறுப்பும் நமக்கு உண்டு. தாவரங்களை மூதாதையரிடமிருந்து நாம் பெற்ற சொத்து என்பதைவிட நமது இளைய சந்ததியினரிடம் இருந்து பெற்ற கடன் எனக்கருதி செயல்படுவது இன்றியமையாதது, இந்தக் கடன் மட்டுமல்லாமல் வட்டியுடன் சேர்த்து அவர்களிடம் ஒப்படைக்க வேண்டிய கட்டாயம் நமக்கு உண்டு. ஒரு தாவரம் பற்றிய அறிவு அல்லது பயன்பாடு தெரியவில்லை என்பதாலேயே அந்தத் தாவரம் தேவையற்ற தாவரம், அதன் அழிவைத்தடுக்க வேண்டியதில்லை என்ற நிலைப்பாட்டினை மனிதன் எடுக்கக் கூடாது. எல்லா வகைத் தாவர இனங்களும் இந்த உலகம் உய்ய உருவாக்கப்பட்டவையே. உலக உயிர்ப் பன்மை ஒரு சிலந்திவலை போன்றது. இதில் ஒரு இழை மனித வாழ்வு. இந்த ஒரு இழை என்ற மனித வாழ்வு தனித்து இயங்க முடியாது. அந்த ஒரு இழையின் நலனை முன்னிறுத்தி வாழ்க்கைப் பாதையை, வாழ்க்கைத் தத்துவத்தை மனிதன் வகுக்க முயல்வதால் வலையின் ஏனைய இழைகள் தத்தளிக் கின்றன. ஏனைய இழைகள் அனைத்தையும் அழித்து ஒரு இழையான மனித இழை உலகில் நிலைபெற முடியாது அனைத்து இழைகளோடு பின்னிப் பிணைந்து இருந் தாலே இழைகள் அடங்கிய வலை வலுவுள்ளதாக இருக்கும்.

மனித குலத்தின் சமீபத்திய ஆபரிமிதமான நாகரிக மற்றும் விஞ்ஞான வளர்ச்சியும், கட்டுக் கடங்காத மக்கட் பெருக்கமும் இயற்கை வளங்கள் மீது பெரும் தாக்கத்தை ஏற் படுத்தியுள்ளன. அதிக வளர்ச்சி பெற்ற உலகின் பல பகுதிகளில் வளர்ச்சியின் காரணமாக சிக்கல்கள் தோன்றியுள்ளன. அமில மழை, வெப்ப முண்டாதல், அதிக கரியமலை வாயு வெளிப்பாடு, ஓசோன் படல துளை, திட, திரவக் கழிவுப் பொருட் களை அகற்று வதில் இடர்பாடுகள் போன்றவை இருப்பதைப்போல வளர்ந்து வரும் அல்லது குறைந்த வளர்ச்சியுடைய நாடுகளில் மக்கட் தொகைப் பெருக்கமும், இயற்கை வளங்களைப் பயன்படுத்தும் தொழில் நுட்பப்பற்றாக் குறையும், உணவு, உடை, குடிநீர் ஆதாரங்கள் அடங்கிய அடிப்படை ஆதாரப் பற்றாக் குறையும் மனிதனுக்குப் பெரும் சவாலாக விளங்கி வருகின்றன.

உலக நாடுகளுக்குள் எத்தகைய பொருளாதார வேறுபாடுகள் இருந்தாலும், கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், காற்று, நீர், மண், ஓசோன் அடங்கிய ஆகாயம் ஆகிய உலகப் பொதுவான உன்னதப் பொருட்களுக்கு சேதம் விளைவிப்பதைத் தவிர்த் தால்தான் உலக உயிரினங்கள் இப்புவியல் இருந்து மறைவதைத் தடுத்து மனித இனம் நீடித்து நிலைத்து வாழ முடியும். இப்புவியில் மனிதன் மறைவதைத் தடுக்க இயலாது என்ற உண்மை யை உலக நாடுகள் முற்றிலுமாகப் புரிந்து கொண்டதன் விளைவாக உலக நாடுகள் அனைத்தும் ஒருங்கி ணைந்து செயல்படும் நிலை இன்றைக்குத் தோன்றி யுள்ளது. உலக நாடுகள் தமக்குள் பரஸ்பர ஒத்துழைப்பு மூலம் இயற்கைக்கு ஊறு விளைவிக்கும் காரணிகளை அகற்றவும், அவற்றின் செயல்பாடுகளைக் குறைக்கவும் முயல்கின்றன.

2. இயற்கை வளங்கள் மேலாண்மை

இத்தகைய ஒரு கால கட்டத்தில் உலகில் உள்ள இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கு பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உயிரினப் பாது காப்புக்கு அதிக அக்கறையும், கவனமும் செலுத்தப் படுகிறது. அதிக நிதி ஆதாரங் கள் அளிக்கப்பட்டு அனைத்து மக்களுக்கும் விழிப்புணர்ச்சியும், அறிவைப் புகட்டும் நிகழ்வுகளும் ஆங்காங்கே நடைபெற்று வரு கின்றன. குறிப்பாக உலக அளவில் வனங்களுக்கு அதிக பாதுகாப்பும், நிதி ஆதாரமும் வழங்கப்பட்டு வருகிறது. தன்னைச் சுற்றிலுமுள்ள இடங்களில் இருந்து மறைந்து வரும் அல்லது மறைந்துவிட்ட அரியபல தாவரங்களை தன்னுள் பொதிந்து வைத்து மனிதனின் கொடிய பார்வையில் இருந்து மறைத்து வைத்துள்ள மரபணுச் சுரங்கங்களான வனங்கள் மனித இனத்தின் மாபெரும் சொத்து. இந்த சொத்தினை தனது இன்னுயிர் ஈந்து காத்து வரும் வனத்துறை போதிய ஒத்துழைப்பின்றித் தவிக்கிறது. வனங் களைக் காப்பது வனத்துறைக்கு மட்டுமே பொறுப்பு என்ற தவறான மனப்போக்கு நெடுங்காலமாக மக்களிடையே நிலவி வருகிறது. பொதுச் சொத்துக் களைப்பேணி காப்பது, அதுவும் வனங்கள் போன்ற மனித உயிர் காக்கும் உன்னத உயிர்ச் செல்வங் களை கட்டிக் காப்பது, ஊர், நாடு, கண்டம் என்ற செயற்கை எல்லைகளைக் கடந்து பூகோளத்தால் ஒன்றுபட்ட உலகில் பிறந்த மனிதன் ஒவ்வொருவரின் கடமை. இந்தக் கடமை மறக்கப்பட்டால், புறக்கணிக் கப்பட்டால், அது ஒரு மனிதன் தன்மையே குழி தோண்டி புதைத்து அழிப்பதற்குச் சமம். தமிழகத் தைப் பொறுத்தவரை இந்த உணர்வை ஒவ்வொரு குடி மகனுக்கும் ஊட்ட வேண்டும் என்ற உன்னத நோக்கில் கூட்டு வன மேலாண்மைக் கொள்கையை வலியுறுத்தி, திட்டங்கள் திட்டி செயலாக்கம் பெற்று வருகின்றன. நீலகிரியில் கூடலூர் அருகில் உள்ள வனங்கள் அடர்ந்த நிலப்பரப்பு மரபணுப் பொதிவிடம் என்று பெயரிடப்பட்டு சுமார் 450 உள்ளூர் தாவர வகைகளையும் சுமார் 1200 க்கும் மேற்பட்ட வெளியிடத் தாவரங்களைக் கொணர்ந்தும். மரபணு பாதுகாப்புச் செய்யப்பட்டு அடுத்துவரும் சந்ததி களின் அரிய சொத்தை தொலைநோக்குப் பார்வை யுடன் காபந்து செய்யும் கடமையை தமிழக வனத்துறை செவ்வனே செய்து வருகிறது. இது போன்ற பணிகளால் மக்களின் மனதில் மாபெரும் மாற்றங்கள் விளைந்து வருகிறது. இந்த மாற்றங்கள் முழுமையாக இருக்கும் பட்சத்தில் நிச்சயம் மனி தனின் வாழ்நாள் எண்ணப்படுவது நிறுத்தப்பட்டு, மனிதனின் ஆயுள் அபரிமிதமாக அதிகரிக்கும்.

மனிதனின் மனமாற்றங்கள் உலக இயற்கை வளங்களைப் பாதுகாக்கும். இயற்கை வளங்கள் பாது காக்கப்பட்டால் மனிதனின் ஆயுள் பாதுகாக்கப்படும். எனவே மனித ஆயுள் காக்கப்பட இயற்கையின் தலையாய அங்கமான வனங்கள் பேணிப்பாதுகாக் கப்படுவது மிக மிக அவசியம். வனத்திற்கு வெளியே சுமார் 10000 ஆண்டுகால வரலாற்றையே கொண்டுள்ள மனிதன் தனது வனத்துடன், வன உயிரி னங்களுடன் தனக்குள்ள நீண்டகால தொடர்பை மறந்துவிட்டது விந்தை யிலும் விந்தை தனது நெருங்கிய சகாக்களான இதர உயிரினங்களின் தொடர்பை மறந்து அவற்றோடு முரண் பட்ட வாழ்க்கையைத் தொடங்கிய உடனே, தனது செய்கையின் தாக்கத்தை மனிதன் உணரத் தொடங்கி விட்டான்.

இயற்கை வளங்களான மண், நீர், காற்று, ஆகாயம், தீ ஆகியவற்றை ஒன்றோடு ஒன்று இயைபு படுத்தி அவற்றிக்கு இடையேயுள்ள சமச்சீர் நிலை யைப் பேணும் தன்மை, உயிரினப் பன்மையை தன்னிடையே செறிவுறக் கொண்டுள்ள வனங் களுக்கே உண்டு. எனவே தான் இந்திய அரசும் வனச்சட்டம், வனப்பாதுகாப்புச் சட்டம், சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டம் போன்ற பலசட்டங்களை இயற்றியும், உலக வனநாள், சுற்றுச் சூழல் தினம், வனமகோற்சவம், வனவிலங்கு வாரம் போன்ற வற்றை கடைபிடித்தும் நாட்டு மக்களிடையே விழிப்புணர்ச் சியை ஊட்ட முயற்சி மேற்கொண்டு வருகிறது.

நீர் ஆதாரங்கள் அருகி, நிலத்தடி நீர் குறைந்து, சுற்றுப்புறச் சூழல் வெகுவாக பாதிக்கப்பட்டு உலகில் வெப்ப நிலை உயர்ந்து மனிதனின் வாழ்க்கைத் தரம் வெகுவாகக் குறைந்து வரும் நிலையில் இயற்கை வளங்கள் மேலாண்மை முக்கியத்துவம் பெற்று வருகிறது. தங்களது அனைத்து பேராசைகளுக்கும், அழிவுச் செயல் களுக்கும் ஈடுகொடுத்து தங்களைத் தாங்களே புதுப்பித்து வந்த இயற்கை வளங்கள் ஒருகட்டத்தில் தமது புதுப்பிக்கும் திறனை இழந்துவிட்டதையும் அதன் காரணமாக தமது வாழ்கையின் வளம் குறைந்த பாலைவனமான மறுபக்கம் தென்படத் துவங்கியதால் இயற்கையை கவனமாகக்கை யாண்டு முரண்படாத வாழ்க்கை முறைகளே உலகில் மனிதனின் நீண்ட வாழ்க்கைக்கு அஸ்திவாரம் என்பது உலக மக்களால் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது.

3. மூலிகைத் தாவரங்கள் பாதுகாப்பது

இன்று உலகில் இதுவரை அறியப்படாத பல கொடிய நோய்கள் நாள்தோறும் தோன்றி மக்களை பய முறுத்தி வருகின்றன. அவற்றிற்கு மருந்தே கண்டு பிடிக்கப்படாத நிலையில் ஆங்கில மருத்துவ முறைகள் உலக மக்களுக்கு பலவிதமாக தீய விளைவு களையும், பக்க விளைவுகளையும் தோற்றுவித்து, சாதாரண மக்கள் கடைபிடிக்கக் கூடிய வகையில் பொருட் செலவு குறைந் ததாக இல்லாதிருப்பதும் இதுகாறும் இதனை நம்பியிருந்த மக்கள் மாற்று ஏற்பாட்டினைத் தேடிச்செல்லும் நிலைமையைத் தோற்றுவித்துள்ளது. பெரும்பாலும், பாரம்பரிய, உணவு அடிப்படையிலான, எளிய, நோய்த்தடுப்பு நோக் கத்தை அடிப்படையாகக் கொண்ட, செலவு குறைந்த தாவரங்களை முற்றிலும் சார்ந்த இந்திய மருத்துவ முறைகளான சித்தா, ஆயுர்வேதம் ஆகியவையும் நெடுங்காலமாக பயன்படுத் தப்பட்டதால் இந்திய மருத்துவ முறைகளாகவே கருதப்படும் யுனானி, திபெத்தியன், ஓமியோபதி மற்றும் மாந்திரிகம், உயிர் காந்த சிகிச்சை உள்ளிட்ட மரபு வழி மருத்துவ முறைகளும் இன்றைக்குப் பலராலும் விரும்பப்படுகின்ற மருத்துவ முறைகளாக மாறி வருகின்றன. காட்டில் பூச்சிகளோடு விலங்குகளோடு தான் சுற்றித் திரிந்தபோது பூச்சிக்கடி, விலங்குக்கடி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டபோது இயற்கையிலேயே தனக்குக் கிடைத்த தனது மருந்துகளைப் பயன்படுத்தி இயற்கையின்பால் தனக்கிருந்த உறவுமுறைகளை தக்க வைத்துக்கொண்ட மனிதன் காட்டிற்கு வெளியே வந்த குறுகிய காலத்தில் நாகரீகப் போர்வையை போர்த்திக் கொண்டு உடலுக்கு ஊறு விளைவிக்கும் மேற்கத்திய மருத்துவ முறைகளை நாடிச் சென்றது தாய்மையை மறந்த செயலன்றோ.

இந்த நிலையில் இந்திய மருத்துவ முறைக ளுக்கு அடிப்படை ஆதாரமாக விளங்கும் தாவரங்கள் முறையாகப் பாதுகாக்கப்பட்டு இனப்பெருக்கம் செய்யப்பட்டு, தீயவர்களால் அதிக ஆசையின் காரணமாக அழிக்கப்படுவதிலிருந்து தடுக்கப்பட வேண்டும் விஞ்ஞான அடிப்படையில் இத்தாவரங் களின் வேதிப் பொருட்கள் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும். வியாபார அடிப்படையில் பிறநாடுகள் இத்தாவரங்ளுக்கு உரிமை கொண்டாடுவதைத் தடுக்க இந்திய அறிவியலாளர்கள் இவற்றை ஆய்வுக்குப் பயன்படுத்தி பொருட்களை உற்பத்தி செய்து அவற்றிக்கு அறிவு சார்ந்த சொத்துரிமை பெறுவதற்கு வழி செய்து நாட்டின் செல்வ நிலைப் பெருக்கத்திற்கு வழி செய்ய வேண்டும் என்று இந்திய அரசு முடிவு செய்து அதற்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தி உள்ளது. அனைத்து அரசுத் துறைகளும் அதன் பொருட்டு முடுக்கி விடப்பட்டுள்ளன. திட்டங்கள் தீட்டி செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில் உயிரணுக்களின் சுரங்க மாகத் திகழும் வனங்களைக் கொண்ட நிலங்களைப் பாதுகாப்பு செய்து வரும் வனத்துறை இந்த ஆக்கப்பூர்வமான பணியில் தன்னை முழு மையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. அதிலும் தமிழகம் இதர மாநிலங் களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. மருத்துவத் தாவரங்களின் மரபணுக்களை அதிகம் கொண்டுள்ள மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் இவற்றோடு நெருங்கிய தொடர்புடைய தாகக் கருதப்படும் சிறுமலை, கொல்லி மலை, கல்ராயன் மலை, சேர்வராயன் மலை, ஏற்காடு மலை போன்ற தனிப்பட்ட குன்றுகளடர்ந்த உள்நாட்டு மலைப்பகுதிகளும் பலவாறாக ஆய்வுக் குட்படுத் தப்பட்டு, மரபணுக்கள் அதிகம் கொண்ட இடங்களை அடையாளம் காணப்பட்டு அவற்றின் பாதுகாப்புக்கு அதிக அக்கறையும், சிறப்பான நிதி ஆதாரங்களும் ஏற்படுத்தப்பட்டு, அதிலுள்ள மூலிகை மரபணுக்கள் முறையாகக் கணக்கெடுக்கப் பட்டுள்ளன. இந்த மரபணுக்கள் பாதுகாப்பு மட்டுமின்றி இவற்றின் இனப்பெருக்கத்திற்கும், இவை பற்றிய அறிவு இல்லா தவர்களுக்கு அறிவு புகட்டும் நிகழ்வுகளும் அரங்கேறி வருகிறது. சுருங்கச் சொன்னால் தமிழக வனத்துறை இவற்றின் பாதுகாப்பிற்கும், வளர்ச்சிக்கும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

மூலிகைப் பாதுகாப்பு என்ற ஒரே காரணத்தை முன்னிறுத்தி செய்யப்படாமல் மக்களின் மூலிகை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி பின்னாளில் அதிகரிக்கும் தேவையைப் பூர்த்தி செய்ய உற்பத் தியை அதிகரிக்கும் நோக்கில் மூலிகை தொடர்பான அனைத்துத் தரப்பினரின் (Stake Holders) பங்கேற் புடன் செய்யப்பட்டால் அம்மூலிகையின் மரபணுப் பாதுகாப்பு வெகு சிறப்பாக இருக்கும் என்பதை வனத்துறைக் கருத்தில் கொண்டுள்ளது. இதன் காரணமன மூலிகைப் பாதுகாப்பு மையங்கள் என்றும் மூலிகை வளர்ப்புமையங்கள் என்றும், மூலிகை விழிப்புணர்வு மையங்கள் என்றும் மூலிகை நாற்றங் கால்கள் என்றும் பெயரிட்டு பல வனப்பகுதி களிலும், வெளி இடங்களிலும் மூலிகைத் தாவரங்கள் ஒருங்கு கொணரப்பட்டு மக்களின் பார்வைக்காக வைக்கப் பட்டுள்ளது. ஒரே மூலிகைத் தாவரம் தொடர்பான பல வகைகள் அதன் சிறப்பியல் புகளை விளக்கி அறிவிப்புப் பலகைகளும் வைக்கப்பட்டுள்ளன. அவைகளின் விதைகள், மூலிகையாகப் பயன்படுத்தும் தாவரத்தின் பகுதிகள் கண்காட்சியாக வைக்கப்பட்டு மக்கள் பயன்பெறும் வண்ணம் செய்யப்பட்டுள்ளது.

இந்தியத் திருநாட்டில் உள்ள 6, 37, 293 சதுர கி.மீ. பரப்புள்ள வனங்களில் 17078 சதுர கி.மீ. அளவுக்கு தன்னிடத்தே கொண்டுள்ள தமிழகம் நீண்ட நெடிய கடற்கரைப் பகுதிகளையும் அனைத்து வகையிலான தட்பவெப்பமுடைய நிலப்பகுதிகளை யும் கொண்டு அரிய வகைத் தாவரங்கள் உள்ளிட்ட உயிர்ப் பன்மையைப் பேணுவதில் முதல் இடத்தில் இருக்கிறது.

இந்தியாவில் உள்ள தாவரங்களில் சுமார் 8000 வகைத் தாவரங்கள் பல்வேறு இந்திய மருத்துவ முறைகளில் பயன்படுத்தப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த 8000 வகைத் தாவரங்களில் சுமார் 1200 வகைத் தாவரங்கள் சித்த மருத்துவத்திலும், சுமார் 1800 வகை ஆயுர்வேதத்திலும், சுமார் 4700 மரபு வழி மருத்துவ முறையிலும் பயன்படுத்தப்படுகின்றன. இந்தத் தாவர இனங்களில் பெரும்பாலானவை தமிழ கத்தின் மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலை சார்ந்த வனப்பகுதிகளில் விளை கின்றன. தமிழகத்தின் மூலிகைப் பாதுகாப்பு மற்றும் வளர்ப்பில் முன்னோடியாகத் திகழும் இடங்கள் பின்வருமாறு

1. தமிழக மூலிகைப் பாதுகாப்பு மையங்கள்

1. பேச்சி பாறை மூலிகை வனம்	-	கன்னியாகுமாரி மாவட்டம்
2. முண்டன்துறை மூலிகை வனம்	-	திருநெல்வேலி மாவட்டம்
3. குற்றாலம் மூலிகை வனம்	-	திருநெல்வேலி மாவட்டம்
4. தாணிப்பாறை மூலிகை வனம்	-	விருது நகர் மாவட்டம்
5. அழகர் கோவில் மூலிகை வனம்	-	மதுரை மாவட்டம்
6. கொடைக்கானல் மூலிகை வனம்	-	திண்டுக்கல் மாவட்டம்
7. கோடியக்கரை மூலிகை வனம்	-	நாகப்பட்டினம் மாவட்டம்
8. டாப்சிலிப் மூலிகை வனம்	-	கோவை மாவட்டம்
9. கொல்லி மலை மூலிகை வனம்	-	நாமக்கல் மாவட்டம்
10. மரக்காணம் மூலிகை வனம்	-	விழுப்புரம் மாவட்டம்
11. தென்மலை மூலிகை வனம்	-	திருவண்ணாமலை மாவட்டம்
12. நம்பிக்கோயில் மூலிகை வனம்	-	திருநெல்வேலி மாவட்டம்

2. தமிழக மூலிகை வளர்ப்பு மையங்கள்

1. தொட்ட பெட்டா	-	நீலகிரி மாவட்ட வனக்கோட்டம்
2. செங்கல்பட்டு	-	செங்கல்பட்டு மாவட்ட வனக்கோட்டம்
3. ஆத்தூர்	-	ஆத்தூர் மாவட்ட வனக்கோட்டம்
4. சேலம்	-	சேலம் மாவட்ட வனக்கோட்டம்
5. தர்மபுரி	-	தர்மபுரி மாவட்ட வனக்கோட்டம்
6. வேலூர்	-	வேலூர் மாவட்ட வனக்கோட்டம்
7. கோயம்புத்தூர்	-	கோயமுத்தூர் மாவட்ட வனக்கோட்டம்
8. மதுரை	-	மதுரை மாவட்ட வனக்கோட்டம்
9. மூலிகைத் தாவர விதை மையம்	-	துணை வனப்பாது காவலர், வன மரபியல் கோட்டம், கோவை

4. உயிர் காக்கும் மூலிகைகள்

மூலிகைகளை சிறுசெடி வகை மூலிகைகள் (Herbs) செடிவகை மூலிகைகள் (Shrubs), கொடி வகை மூலிகைகள் (Climbers), மரவகை மூலிகைகள் (Trees), என தாவரவகைகளின் அடிப்படையில் பாகுபாடு செய்யலாம் - உணவாகும். மூலிகைகள், மணக்கும் மூலிகைகள் என பயன்பாட்டு அடிப்படையிலும் வகைப்படுத்தலாம். இறைவழிபாடு சார்ந்த பலமூலிகைகளும் உண்டு. மூலிகைகளின் அரிய நிலையைக் கருதி அரிய மூலிகைகள், அபாயகட்டத்தில் உள்ளவை, அழிவின் விளிம்பில் உள்ளவை எனவும் வகைப்படுத்தலாம். இது தவிர குறிப்பிட்ட இடங்களில் மட்டும் கிடைக்கக்கூடிய Endomic வகைத் தாவரத் தாவரங்களும் உண்டு. மூலிகை உள்ளிட்ட உலகில் இருந்து மறைந்து விட்ட தாவரங்கள் பல. இந்தியாவில் இவ்வாறு மறைந்து விட்ட தாவரங்கள் பற்றிய சிறப்பு விவர அட்டவணை, (Red Data Book), இந்திய , தாவர ஆய்வு நிறுவனத்தால் (BSI), மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு பதிப்பிலும் பக்கங்கள் கூடி வருகிறது. இதில் தாவரங்கள் எண்ணிக்கை கூடக்கூட மனிதனின் வாழ்நாட்கள் விரல் விட்டு எண்ணப்பட்டு வருவதன் பயங்கரத்தை யாரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இந்த உணர்வு உந்தப்பட்டு மூலிகை பாதுகாப்பு செய்யப்பட்டு, உலகில் தோன்றும் ஒவ்வொரு நோய்க்கும் தன்னிடமே அதற்கு மருந்தை வைத்திருக்கும் இயற்கையை மதித்து நடந்தால் இயற்கை தன்னிடமுள்ள உயிர்காக்கும் மூலிகைகளை தாய்மை உணர்வுடன் நமக்கு எப்போதும் வழங்கிக்கொண்டிருக்கும்.

இந்திய மருத்துவத் முறைகளில் வெகுவாக பயன்படும் 50 வகை மூலிகைகளின் பெயர், தாவர இனப் பெயர், குடும்பம், தீர்க்கும் நோய்கள் மருந்தாகும் பாகம் போன்ற செய்திகள் அவற்றின் புகைப்படத்துடன் பின்வருமாறு -

பெயர் : இஞ்சி 1

தாவர : ஜின்ஜிபர் அஃபிசியனாலீ

இனப்பெயர் Zingiber officinale

குடும்பம் : ஜின்ஜிபைராசியே

Zingi Beraceae

தீர்க்கும் நோய்கள் : ஜீரணம், குடல் புண், ஆஸ்துமா

மருந்தாகும் பாகம் : தரைக்கீழ் தண்டு (இஞ்சி மற்றும் சுக்கு)



பெயர் : மிளகு 2

தாவர : பைப்பர் நைக்ரம்

இனப்பெயர் Piper nigrum

குடும்பம் : பைப்பரேசியே

Piperaceae

தீர்க்கும் நோய்கள் : ஆஸ்துமா, காய்சல், இருமல்

மருந்தாகும் பாகம் : பழங்கள்

பெயர் : திப்பிலி 3

தாவர : பைப்பர் லோங்கம்

இனப்பெயர் Piper longum

குடும்பம் : பைப்பரேசியே

Piperaceae

தீர்க்கும் நோய்கள் : வயிற்றுவலி, ஜீரணம், ஆஸ்துமா, வாயு தொல்லை

மருந்தாகும் பாகம் : வேர், பழம் மற்றும் தண்டுபாகம்



பெயர் : நெல்லி 4

தாவர : ஃபில்லாந்தஸ் எம்பிலிகா

இனப்பெயர் Phyllanthus emblica

குடும்பம் : யூபோர்பேசியே

Euphorbiaceae

தீர்க்கும் நோய்கள் : உடல் வெப்பத்தை சமநிலை செய்கிறது மளமிலக்கி

மருந்தாகும் பாகம் : பழுத்து காய்ந்த பழம், விதை, இலை,வேர்,மரம்,பட்டை,மலர்

5. கடுக்காய்
டெர்மினாலியா செபுலா
Terminalia chebula
காம்பரேட்டேசியே
Combretaceae

குடல் புண், மஞ்சக்காமாலை,தோல் நோய்கள், காய்ச்சல், இதயக்கோளாறு, வாயு சம்பந்தமான நோய்கள்

முதிர்ந்த அல்லது பழுத்த பழங்கள்



6. தான்றிக்காய்
டெர்மினாலியா பெல்லரிக்கா
Terminalia bellerica
காம்பரேட்டேசியே
Combretaceae

கபம், வாதம், தோல் நோய்கள், வயிற்றுப்புண், வயிற்றுக்கடுப்பு, முடிவெள்ளை ஆவதைத்தடுத்தல்

மரப்பட்டை, பழங்கள்

7. சிற்றரத்தை
அல்பைனா கலங்கா
Albinia galanga
ஜிஞ்சிபரேசியே
Zingiberaceae

இரத்தஅழுத்தத்தை சீர்செய்கிறது, தொண்டை, வாதம், மூச்சு சம்பந்த மான நோய்கள்

தரைக்கீழ் தண்டு

8. வசம்பு
அகோரஸ் காலமஸ்
Acorus calamus
அரேசியே
Araceae

இருமல்,மூட்டு வலி, தோல்நோய்கள் மனநிலை பாதித்தல், வயிற்றுக்கடுப்பு

தரைக்கீழ் தண்டு

9. மஞ்சள்

குர்குமா லோங்கா

Curcuma longa

ஜின்ஜிபெரேசியே

Zingiberaceae

வாதம், பித்தம், கண்பார்வை,குடல் புண் தொழுநோய், ஆஸ்துமா, காய்ச்சல்,குடல் புழு. இனப்பெறுக்க உறுப்பு கோளாறு

தரைகீழ் தண்டு,
(காய்ந்த மற்றும் பச்சையுடன்)

10. துளசி

ஒசிமம் சேங்க்டம்

Ocimum sanctum

லேபியேடே

Labiatae

வாயு கோளாறு, மலேரியா, குடல் புண், தோல் நோய், ரத்தசுத்தம் செய்தல், வயிற்றுப்போக்கு

இலை, விதை, வேர்



11. வில்வம

ஏஜில் மார்மலாய்ஸ்

Aegle marmelos

ரூடேசியே

Rutaceae

வயிற்றுப்போக்கு, குழந்தைகளின் வயிறு வீங்குதல். இனப்பெருக்க உறுப்பு கோளாறு, காது கேட்காமை, தோல் நோய்

வேர், இலை, பழம், பட்டை

12. திருநீற்றுப்ளபச்சிலை

ஒசிமம் பேசிலிகாம்

Ocimum basilicum

லேபியேடே

Ladiatae

வயிற்று கடுப்பு, மூலம், இனப்பெருக்க உறுப்பு கோளாறு, ஆஸ்துமா

இலை, பூக்கள், விதை

13. சிறு குறிஞ்சான்
ஜிம்னெமா சில்வஸ்டர்
Gymnema sylvestre
ஏஸ்கிளபியாடேசியே
Asclepiadaceae

இரத்தத்தில் சக்கரையின் அளவை சரி செய்தல், சக்கரை நோய்யை குணப்படுத்துதல்

வேர், இலை

14. மாகாளி கிழங்கு
டிகாலிப்ஸ் ஹேமில்டோனி
Decalepis hamiltoni
ஏஸ்கிளபியாடேசியே
Asplepiabaceae

பசி உண்டாக்கும்

வேர்

15. சிறியாநங்கை
ஆஸ்ட்ரோகிராபிஸ் பேனிகுலேட்டா
Andrographis paniculata
அகான்தேசியே
Acanthaceae

வயிற்றுவலி, தீப்புண் காயம் சரிசெய்தல், குடல் புண், மலேரியா காய்ச்சல், வயிற்றுப் போக்கு, பித்த சம்பந்தமான வியாதிகள

தாவரத்தின் முழுப்பகுதியும்

16. சர்ப்பகந்தி
ரா:.வோல்பியா செர்பன்டைனா
Rauvolfia serpentina
அபோசினேசியே
Apocynaceae

இரத்த அழுத்தம், ககாய்ச்சல், காயம், மயக்கம், மற்றும் கபம், வாதம்

வேர் மற்றும் இலைகள்



17. பாம்பு களா
ரா∴வோல்பியா டெட்ரோபில்லா
Rouvolfia tetraphylla

அபோசைனேசியே
Apocynaceae

இரத்த அழுத்தம், தோல் நோய்

வேர்

18. மருதாணி (அ) மருதோன்றி
லாசோனியா இனர்மிஸ்
Lawsonia inermis

லித்ரேசியே
Lythraceae

மஞ்சள் காமாலை, பைத்தியம்,
முடித்தைலம்
வேர், இலை, பூக்கள்

19. தூதுவளை
சொலானம் ட்ரைலோபேட்டம்
Solanum trilobatum
சொலனேசியே
Solanaceae

ஆஸ்துமா, நுரையீரல் நோய்

வேர், இலை, காய், தாவரப்பகுதிகள்

20. அமுக்கரா
வைத்தான்யா சோம்னி∴பெரா
Withania somnifera
சொலனேசியே
Solanaceae

புத்துணர்ச்சி ஊட்டும் பாணம், குடல் புழு நோய்கள், காய்ச்சல், உடல் வீக்கம், கண் பார்வை குறைபாடு, உடல் தாதுபலம்

வேர், இலைகள்.

21. சீந்தல் கொடி
டினோஸ்போரா கார்டிபோலியோ
Tinospora cordifolia
மெனிஸ்பெர்மாசியே
Menispermaceae

ஜீரணம், வயிற்றுவலி, வாதம், தீகாயங்கள், தோல்நோய், இரும்மல், ஆஸ்துமா, மஞ்சள் காமாலை, ஆண்மை குறைவு

செடிமுழுதும்

22. தவசுமுருங்கை
சாரோபஸ் ஆண்ட்ரோகைனஸ்
Sauropus androgynus
யுபோர்பியேசியே
Euphorbiaceae

Multivitamin

இலைகள்

23. மணத்தக்காளி
சொலானம் நைக்ரம்
Solanum nigrum
சொலனேசியே
Solanaceae

இதயநோய் குணப்படுத்த, ஆஸ்துமா, மூட்டுவலி, குடல் புண், தோல்நோய்

தாவரத்தின் முழுப்பகுதி



24. வல்லாரை
சென்ட்டெலா ஆசியாட்டிகா
Centella asiatica
அபியேசியே
Apiaceae

இரத்தம் சுத்தம் செய்தல், மூளையின் ஞாபகத் தன்மையை அதிகரித்தல்

தாவரத்தின் முழுப்பகுதி

25. நிலஆவரை
கேசியா இட்டாலிகா
Cassia italica
சிசல்பினியேசியே
Caesalpiniaceae

மல சுத்தி

இலைகள்

26. நீர்பிரம்மி
பேகோபா மொன்னெரி
Bacopa monnieri
ஃஸ்க்ரோபுலாரியேசியே
Scrochophulariaceae

குடல் புண், கட்டிகள், தோல் வியாதி, காய்ச்சல், மூட்டு வலி, கால் வீக்கம்

தாவரத்தின் முழுப்பகுதி

27. சென்னா
கேசியா சென்னா
Cassia senna
சிசல்பினியேசியே
Caesalpineaceae

மலம் இலக்கி, தோல் நோய்

பழம் மற்றும் இலைகள்

28. கீழாநெல்லி
ஃபில்லான்தஸ் அமாரஸ்
Phyllanthus amarus
யூபோர்பேசியே
Euphorbiaceae

மஞ்சக்காமாலை, காய்ச்சல்
சிறுநீர் உறுப்புக்கோளாறு

தாவரத்தின் முழுப்பகுதி

29. சீமை அகத்தி
கேசியா எலேட்டா
Cassia alata
சிசல்பினியேசியே
Caesaepineaceae

தொழு நோய் மற்றும் தோல் வியாதிகள்

இலைகள்

30. வரகு மஞ்சள் (அனோட்டா)
பிக்சா ஒரெல்லானா
Bixa orelliana
பிக்சேசியே
Bixaceae

காய்ச்சல், இனப்பெருக்க உறுப்பு கோளாறு, வயிற்றுக் கடுப்பு.

வேர், பட்டை, விதைகள்



31. சதாவரி
ஆல்பெராகஸ் ரேசிமோஸஸ்
Asparagus racemosus
லில்லியேசியே
Liliaceae

இரத்தம் சுத்தம்செய்தல், வெள்ளை படுதல்

வேர்

32. நன்னாரி
ஹெமி டெஸ்மஸ் இண்டிகஸ்
Hemidesmus indicus
அஸ்லெபியாடேசியே
Asclepiadaceae

இரத்தம் சுத்தம் செய்தல், புத்துணர்ச்சி யூட்டும் பாணம்

வேர்

33. ஆடாதொடை
ஆடாதொடா வாசிகா
Adhatoda vasica
அகான்தாசியே
Acanthaceae

இருமல், சளி, காய்ச்சல்

இலைகள், வேர் மற்றும் தண்டு

34. நீலி அவுரி
இண்டிகோ ஃபெராடின்க்டோரியா
Indigofera tinctoria
ஃபேபேசியே
Fabaceae

வாயு சம்பந்தமான, இதயம் சம்பந்தமான சளி, ஆஸ்துமா

தாவரத்தின் முழுப்பகுதி



35. காசினிக்கீரை
சிக்கோரியம் இண்டிபாஸ்
Cichorium intybus
ஆஸ்டெராசியே
Asteraceae

வயிற்று வலி, மஞ்சக்காமாலை, காய்ச்சல், ஆஸ்துமா

தாவரத்தின் முழுப்பகுதி

36. செம்பருத்தி
ஹைபிஸ்கஸ் ரோசாசைனைசிஸ்
Hibiscus rosasinensis
மால்வேசியே
Malvaceae

இரத்தப் போக்கு, முடித்தைலம்

பூக்கள் மற்றும் வேர்

37. கண்வலிக்கிழங்கு (செங்காந்தல் மலர்)
குளோரியோசா சுபர்பா
Gloriosa superba
லில்லியேசியே
Liliaceae

ஜீரணம், வயிற்றுவலி, கபம், பித்தம், தோல் வியாதி, குழந்தைப்பேறு வலி

தண்டடிக் கிழங்கு, இலை



38. பூனைக்காலி
முக்குனா புருரியன்ஸ்
Mucuna pruriens
பாபேசியே
Fabaceae

வாதம், பிதடதம், குடல் புண், தீக்காயம்

வேர், இலை, விதை தூவிகள



39. சோற்றுக் கற்றாழை
அலோ வேரா
Aloe vera
லில்லியேசியே
Liliaceae

வயிற்று வலி, வெட்டுக்காயம், தோல் நோய்கள்

தாவரத்தின் இலை மற்றும் திரவம், வேர்



40. பிரண்டை
சிஸ்ஸஸ்
Cissus quadrancularis
விட்டாசியே
Vitaceae

தோல் வியாதி, குடல் புண் வீக்கம், எலும்புமுறிவு

தாவரத்தின் முழுப்பகுதி

41. முசுமுசுக்கை
முக்கிய மதராஸபட்டனா
Mukia maderaspatana
குக்கர்பிட்டேசியே
Cucurbitaceae

சளி, இருமல்

முழுத்தாவரம்

42. பொடுதலை
ஃபிலா நொடிபுளோரா
Phyla nodiflora
வெர்பனேசியே
Verbanaceae

தலைப்பொடுகு, சிறுநீர் பிரிவதில் சிக்கல்
முழுத்தாவரம்



43. சிறுபூளை
ஏர்வா லனாட்டா
Aerva lanata
அமராந்தேசியே
Amaranthaceae

சீறுநீரகக்கல்

முழுச்செடி

44. கொடி வேலி
பிளம்பாகோ சைலானிக்கா
Plumbago zeylanica
பிளம்பகனியேசியே
Plumbaginaceae

வாயு தொல்லை, இருமல், மூட்டு வலி, தோல் வியாதி,

வேர்

45. நஞ்சறுப்பான்
டைலோ:.போரா இண்டிகா
TylophoraIndica
ஆஸ்கிலப்பியாடேசியே
Asclapiadaceae

ஆஸ்துமா, மூட்டுவலி, இருமல், வயிற்றுப்போக்கு, வயிற்றுக்கடுப்பு, புற்றுநோய்

வேர், இலை



46. அம்மான் பச்சரிசி
யூபோர்பியா ஹிர்ட்டா
Euphorbia hirta
யூபோர்பியாசியே
Euphorbiaceae

தோல் நோய், வாய்ப்புண், ஆஸ்துமா

முழுத்தாவரம்

47. நிலப்பனை
குர்குலிகோ ஆர்க்கியாய்ஸ்
Curculigo orchiodiaes
அமரிலிடேசியே
Amarilidaceae

நரம்பு நோய்கள் சரிசெய்தல்,

வேர், கிழங்கு

48. முறிகூட்டி
ஹெமி கிரா:.பிஸ் கொலராட்டோ
Hemegraphis colerata
அகாதேசியே
Acanthaceae

எலும்பு முறிவு

இலைகள் மற்றும் வேர்

49. சங்கு புஷ்பம்
கிளைடோரியா டெர்னேட்டா
Clitoria ternata
பாபேசியே
Fabaceae

தீக்காயங்கள், ஆஸ்துமா, குடல் புண்

வேர், இலை, விதை

50. அப்பக்கோவை
ரிங்கோகார்பா ∴போடிடா
Rhynchocarba foetida

முலநோய் மற்றும் ஆஸ்துமா, கால்நடை நோய்

இலைகள்



51. குப்பைமேனி
அகாலிபா இண்டிகா
Acalypha indica
யூபோர்பியேசியா
Euphorbiaceae

குடல் புழு, வீக்கம், ஆஸ்துமா, காய்ச்சல்

வேர், இலை, பூக்கள்



52. துத்தி
அபுட்டிலான் இண்டிகம்
Abutilon indicum
மால்வேசியா
Malvaceae

இரத்தக்குழாய் சம்மந்தமான நோய்கள், இனப்பெருக்க உறுப்பு செயல்பாடு சரிசெய்தல், மூலநோய்

வேர், பட்டை, இலை, விதை, பழம்

5. மூலிகைகளின் தாவர இனப் பெயர்கள்

தமிழக வனத்துறையின் கட்டுப் பாட்டிலுள்ள நாற்றங்கால்கள் மற்றும் மூலிகைப் பண்ணைகளில் பாதுகாத்து வைத்துள்ள மூலிகைகள் சுமார் 400-க்கும் மேற்பட்டவை. அவற்றின் தாவர இனப் பெயர்கள் பின்வருமாறு -

1. ஆழியார் மையம் பொள்ளாச்சி

வரிசை எண்	தாவர இனப்பெயர்	குடும்பவகை	தமிழ் பெயர்
1.	அமரான்தஸ் ட்ரிஸ்டிஸ்	அமரேன்தேசி	அரைக் கீரை
2.	முண்டிஞ்சியா கேலபுரா	எலியோகார்பேசி	சிரி பழம்
3.			விச முரிச்சான் செடி
4.	ஏப்ரஸ் ப்ரிகடோரியஸ்	பேபேஸி	குன்றி மணி
5.	அபுடிகான் இண்டிகம்	மால்வேஸி	துத்தி
6.	அக்சோகியா கேசியா	மைமோசாயிடி	முல்
7.	அக்காசியா லியூகோ ஃலூயா	மைமோசாயிடி	வெல்வேல் வேல்வேலம்
8.	அக்காசியா நிலோடிக்கா	மைமோசாயிடி	கருவேலி
9.	அக்காசியா சினுலேட்டா	மைமோசாயிடி	சீகைக்காய்
10.	அக்காலிப்பா ஃபுருட்டிகோசா	யூபொர்பியேசி	சின்னதாழை
11.	அக்காலிப்பா இன்டிகா	யூபொர்பியேசி	குப்பை மேனி
12.	அக்கிரான்தஸ் அஸ்லரா	அமராந்தேஸி	நாய்யூருவி
13.	அக்கோரஸ் கலாமஸ்	ஏரேஸி	வசம்பு
14.	ஆடதொட பெடோமி	அக்கான்தேசி	சின்ன ஆடதொடா
15.	அடினான் தீரா பவோனியானா	மைமோசாயிடி	ஆனைகுன்றி மணி
16.	ஏக்லிமார்மிலஸ்	ரூடேஸி	வில்வம்
17.	ஏர்வா லனேடா	அமராந்தேஸி	சிறு பூளை
18.	அகேவ்கான்குலா	அகாவேஸி	ஆனைகற்றாழை
19.	அல்பிஜியா அமரா	மைமோசாயிடி	ஊஞ்சல்
20.	அல்பிஜியா லெபெக்	மைமோசாயிடி	வாகை
21.	அல்லியம் சீப்பா	அல்லியேஸி	வெங்காயம்
22.	அல்லியம் சட்டைவம்	அல்லியேஸி	வெள்ளைப்பூண்டு
23.	அலோகேசியா இன்டிகா	ஏரேஸி	சேப்ப கிழங்கு
24.	அலோ வீரா	லில்லியேசி	சோற்றுக்கற்றாழை
25.	அல்பினியா கால்கரேட்டா	ஜின்ஜிபரேஸி	சிற்றரத்தை
26.	அல்ஸ்டோனியா ஸ்காலரிஸ்	அஃபோசைனேஸி	ஏழிலைபாலை
27.	அல்ஸ்டோனியா வெனினேட்டா	அஃபோசைனேஸி	அனலிவேகம்
28.	அல்ட்டர்ருநந்திரா செஸிலிஸ்	அமராந்தேஸி	பொன்னாங்கன்னி
29.	அமராந்தஸ் ஸ்பிசிஸ்	அமராந்தேஸி	தண்டுக்கீரை
30.	அமராந்தஸ் ஸ்பைனோசா	அமராந்தேஸி	முள்ளு கீரை
31.	அனகார்டியம் ஆக்சிடென்டேல்	அனகார்டியேஸி	முந்திரி
32.	அனாமிட்ரா காக்குலஸ்	மெனிஸ்பெர்மேசி	காக்கை கொல்லி
33.	ஆன்ரோ கிராபிஸ் மேக்ரோபோட்ரிஸ்	அக்கான்தேசி	பெரியாநங்கை
34.	ஆன்ரோகிராபிஸ் பேனிகுலேட்டா	அக்கான்தேசி	சிரியாநங்கை
35.	அனிகோசில்லஸ் கார்னோசஸ்	லேபியேசி	கற்பூரவள்ளி
36.	அனிசோமிலிஸ் மலபாரிக்கா	லேபியேசி	பேய்மிரட்டி

வரிசை எண்	தாவர இனப்பெயர்	குடும்பவகை	தமிழ் பெயர்
37.	அனோனா ஸ்கோமோசா	அன்னோனேசி	சீதா
38.	அரிக்கா கேட்ச்சு	அரிக்கேஸி	பாக்கு
39.	ஆர்ஜிமோன் மெக்ஸிக்கானா	பப்பாவிரேஸி	பிரமதண்டு
40.	அரிஸ்டலோகியா பிராக்டியேட்டா	அரிஸ்டாலோகேசி	ஆடுதின்னா பாளை
41.	அரிஸ்டலோகியா இன்டிகா	அரிஸ்டாலோகேசி	ஈஸ்வரமுலி
42.	அர்தோ போட்ரிஸ் எக்ஸாபீடாஸ்	அன்னோனேசி	மனோரஞ்சிதம்
43.	ஆர்டிமிசியா நீலகிரிக்கா	அஸ்டாரேஸி	மாசிபாசை
44.	ஆர்டிமிசியா மார்விச் புளோரா	அஸ்டாரேஸி	பாசை
45.	ஆர்டிமிஸியா சிரவர்சியானா	அஸ்டாரேஸி	மரிக்கொழுந்து
46.	ஆர்டோகார்பஸ் எட்டிரோ:.பில்லஸ்	மோரேஸி	பலா
47.	அருண்டோ டொனிக்ஸ்	போயேஸி	சினாலி
48.	ஆஸ்க்லிபியா குராசாவிக்கா	ஆஸ்கிலிப்டேஸி	விசகடிவேர்
49.	ஆஸ்க்லிபியா ஸ்பிஸிஸ்	ஆஸ்கிலிப்டேஸி	இருவாபூ
50.	ஆஸ்பராகஸ் ரெஸிமோஸஸ்	லில்லியேஸி	சதாவரி
51.	அஜாரிடிராக்ட்டா இன்டிகா	லிபியேஸி	வேம்பு
52.	அஜிமா டேட்ரா கான்தா	சால்வடோரேசி	சங்கம்
53.	பக்கோபா மொனிரி	ஸ்கார்புலரேஸி	பிரம்மி
54.	பாம்புசா அருண்டினேஸி	போயேஸி	மூங்கில்
55.	பேசில்லா ஆல்பா	அமராந்தேஸி	பசலைக்கீரை
56.	பாக்னியா பர்ப்பூரியா	சிசல்பினேசி	மந்தாரை
57.	பெகொனியா ஸ்பிஸிஸ்	பேகோனியேஸி	ரத்தசுரி
58.	பெனின்காசா செரி:.ரா		பூசணி
59.	பிக்ஸா ஒரிலினா	பிக்சோஸி	வரகுமஞ்சள்
60.	பிலி:.பேரிஸ் மெட்ராஸ் பட்டான்ஸிஸ்	அக்கான்தேசி	நித்திரபூண்டு
61.	போகலேரியா டியுசா	நிக்டாஜினேசி	மூக்கிரட்டை
62.	பியூட்டியா மோனோஸ்பெர்மா	யேபேசி	பொரசு
63.	சிசல்பினியா கிரிஸ்டா	சிசல்பினியேஸி	கழசிக்காய்
64.	சிசல்பினியா புல்சேரிமா	சிசல்பினியேஸி	மயில்கொன்றை
65.	சிசல்பினியா சப்பன்	சிசல்பினியேஸி	பதங்கம்
66.	கலாமஸ் ரோட்டங்	அரிக்கேஸி	பிரம்பு
67.	கேலோபில்லம் இனோ:.பில்லம்	லூசியேஸி	பின்னை
68.	சேலோட்ராபிஸ் ஜைகான்டியா	ஆஸ்கில்ப்டேஸி	வெள்ளை எருக்கு
69.	கெமாலியா சைனன்ஸிஸ்	பியேஸி	தேயிலை
70.	கேன்தியம் டைகோகாகம்	ரூபியேஸி	இருளி
71.	பேப்பாரிஸ் ஜைலானிகா	ஸேப்பாரிடேஸி	தொன்டி,ஆதாண்டம்
72.	கேப்ஸிக்கம் :.புருடடசன்ஸ்	ஸோலனேஸி	மிளகாய்
73.	காரலுமா அம்பலேட்டா	ஆஸ்குலப்டேசி	கள்ளிமுலையான்
74.	கார்டியோஸ் பெர்ம்ம் எல்காகபம்	சேபின்டேஸி	முடுக்கத்தான்
75.	கேசியா க்ரண்டன்ஸ்	அப்போஸைனேஸி	கிளா,களா
76.	கேசியா எலேட்டா	சிசல்பினியேஸி	சீமைஅகத்தி
77.	கேசியா ஆரிகுலேட்டா	சிசல்பினியேஸி	ஆவாரம், அவரை
78.	கேசியா இட்டாலிகா	சிசல்பினியேஸி	நீலவாகை
79.	கேசியா இட்டாலிகா	சிசல்பினியேஸி	நிலஅவரை

வரிசை எண்	தாவர இனப்பெயர்	குடும்பவகை	தமிழ் பெயர்
80.	கேசியா நீலகிரியன்ஸிஸ்	சிசல்பினியேஸி	சூரியன்வாகை
81.	கேசியா சென்னா	சிசல்பினியேஸி	திருநெல்வேலிசென்னா
82.	கேசியா சொபிரா	சிசல்பினியேஸி	சிறுபிரம்பி
83.	கேத்தரான்தஸ் ரோசியா	அப்போஸைனேஸி	நித்தியகல்யாணி
84.	சென்டில்லா ஆசியாட்டிகா	அம்பெல்லிபேரே	வல்லாரை
85.	சிக்கோரியம் இன்டிபஸ்	அஸ்ட்ரேசி	காசினிக்கீரை
86.	சின்னம் மாம் வீரம்	லாரேஸி	இலவங்கம்
87.	சிசாம்பிலஸ் பெரிரா	மெனிஸ்பெர்மேஸி	பொன்முசுட்டை
88.	சிஸ்சுஸ் கோட்ராங்குலாரிஸ்	வைடேஸி	பிரண்டை
89.	சிட்ரல்லஸ் கோலிஸின்திஸ்	குக்கர்பிட்டேஸி	ஆற்று தும்மட்டி
90.	சிட்ரஸ் மெடிக்கா	ருட்டேஸி	எலுமிச்சை
91.	கிலாசினா டென்டேட்டா	ருட்டேஸி	காட்டுகருவேப்பிலை
92.	கிலிஸ்டான்தஸ் கொலினஸ்	யூபோர்பியேஸி	ஒடுவம்
93.	கிலிரோடென்ரான் இன்னர்மி	வெர்பனேஸி	பீச்சங்கு
94.	கிலியோம் கைனான்ட்ரம்	க்லியோம்மேசி	நல்வேளை
95.	கிலியோம் விஸ்கோஸம்	க்லியோம்மேசி	நாய்வேளை
96.	கிலிரோடென்ரம் ஃபுளோமிடிஸ்	வெர்பனேஸி	தழுதாலை
97.	கிலிடோரியா டெர்னேட்டா	ஃபேபேஸி	சங்குபுஸ்பம்
98.	காக்கினியாகிரான்டிஸ்	குக்கர்பிடேஸி	கோவை
99.	காக்சினியா ஸ்பிசிஸ்	குக்கர்பிடேஸி	அப்பக்கோவை
100.	காக்குலஸ் இர்சுடஸ்	மெனிஸ்பெர்மோஸி	காட்டுக் கொகு
101.	காப்பியா அராபிக்கா	ருபியோஸி	காப்பி
102.	கோய்க்ஸ்லேக்ரிமானோபி	போயோஸி	நெல் பவழம்
103.	கொலக்கேசியா எஸ்குலேன்டா	ஏரோஸி	பால் கோம்பு
104.	கொலக்கேசியா எஸ்குலேன்டா	ஏரோஸி	சேம்பு
105.	கமாலினா பெங்காலென்ஸிஸ்	கமலியோஸி	கானா வாழை
106.	கார்கோரஸ் ட்ரைலாக்கிலாரிஸ்	டிலியோஸி	புண்ணாக்கு பூடு
107.	காஸ்சினியம் பெனிஸ்ட்ரேடம்	மெனிஸ்பெர்மேசி	மரமஞ்சள்
108.	காஸ்டஸ் ஸ்பிசியோஸஸ்	காஸ்டேஸி	நாட்டு கொஸ்டம்
109.	கிரடீவா அடோனோனி	கெப்பாரிடேசி	மாவிலங்கம்
110.	கிரினம் லேட்டி போலியம்	அமரிலிடேஸி	விசமூங்கில்
111.	குரட்டலேரிபா பலிடா	ஃபேயோஸி	
112.	குரட்டலேரிபா லாபூர்னிபோலியா	ஃபேயோஸி	கிலுகிலுப்பூ
113.	குரோட்டான் பான்டன்டியான்	யூபோர்பியேஸி	மிளகாய் பூண்டு
114.	கிரிப்போலிப்பிஸ் பூக்கானி	ஆஸ்கிலிப்டேஸி	கிருஷ்ண பாலை
115.	கூட்பினியா அடுண்டுனேரியா		
116.	கர்கிலிகோ ஆர்க்கினாய்டிஸ்	ஹைபாக்ஸிடேஸி	நிலப்பாலை
117.	கர்குமா லாங்கம்	ஜின்ஜிபரேஸி	மஞ்சள்
118.	சிம்போபோகன் பிலக்ஸோஸ்	போயேஸி	கற்பூர புல்
119.	சைனோடான் டேக்லிடான்	போயேஸி	அருகம்புல்
120.	சைனோடான் டேக்லிடான்	போயேஸி	அருகு
121.	டட்டுரா மெட்டல்	சோலனேஸி	கருஊமத்தை
122.	பீக்காலிப்பிஸ் ஏமில்டோஸி	பெரிப்லோகோஸி	மாகானி கிழங்கு

வரிசை எண்	தாவர இனப்பெயர்	குடும்பவகை	தமிழ் பெயர்
123.	டெலோனிக்ஸ் எலேட்டா	சிசால்பினியேசி	வாதநாராயணன்
124.	டென்ட்ரோ காலமஸ் ஸ்டிரிக்டஸ்	போயேஸி	கல்மூங்கில்
125.	டையாஸ் கொரியா ஸ்பீஸிஸ்	டையஸ்கோரியேசி	வெற்றிலை பாலை
126.	டிப்லோசைகலஸ் பால்மேட்டாஸ்	குக்கர்பிட்டேஸி	இவிராலி
127.	எக்லிப்டா புராஸ்ரேட்டா	ஆஸ்பிரேஸி	கரிசிலாங்கண்ணி
128.	எலட்டேரியா கார்டமம்	ஜின்ஜிப்ரேசி	ஏலம்
129.	எமிலியா சொன்சிபோலியா	ஆஸ்பரேஸி	சீதேவி செங்கழுநீர்
130.	எனிகோஸ்டிமா ஒக்சலேஸி	ஜென்டியானேஸி	வெள்ளருகு
131.	என்சிட்டி சுப்பர்பம்	முசேசி	மலை வாழை
132.	எரித்ரினா சுப்பரோசா	பேபேசி	கல்யாண முருங்கை
133.	எரித்ரினா வேரிகேட்டா	பேபேசி	முள்முருங்கை
134.	யூக்கலிப்டஸ்	மிர்டேஸி	யூக்கலிப்டஸ்
135.	யூபோர்பியா சைதோபோரா	யூபோர்பேசி	பால்பெருக்கி
136.	யூபோர்பியா ஈர்டா	யூபோர்பேசி	அம்மான்பச்சரிசி
137.	யூபோர்பியா ஷிலுவியா	யூபோர்பேசி	நாகதாலி
138.	எவால்வுலஸ் அல்சினாய்டிஸ்	கன்வால்வுலேஸி	விஸ்ணுகிரந்தி
139.	எக்கோகேரியா	ஜென்டியனேசி	
140.	பைகஸ் பென்காலென்ஸிஸ்	மோரேஸி	ஆலமரம்
141.	பைகஸ் ரெசிமோசா	மோரேஸி	அத்தி
142.	பைகஸ் ரிலிஜியோசா	மோரேஸி	அரசு
143.	ஃபிலிஸியம் டெசிபியன்ஸ்	சேப்பின்டேஸி	ஆத்துவாரி
144.	கார்சினியா காம்பிகட்டா	இலுசியேஸி	கொடம்புளி
145.	கார்டினியா ஆர்குஸ்டேட்டா	ஒலியேஸி	தீகா மல்லி
146.	ஜென்டுரோசா வால்காரிஸ்	அக்கான்தேசி	கருநொச்சி
147.	கிலினஸ் லேட்டாய்டிஸ்	முல்லூனிளேஸி	செறுப்பாடி
148.	க்லைகாஸ்மிஸ் பென்டபில்லா	ரூடேஸி	கொஞ்சி
149.	மெலினா ஆர்போரியா	வெர்பனேசி	குமிழ்
150.	காஸிப்பயம் எர்பாசியம்	மால்வேசி	செம்பருத்தி
151.	கிரிவியா டிலிபோலியா	டிலியேஸி	சடச்சி
152.	ஜிம்னிமா சில்வஸ்ட்ரிஸ்	ஆஸ்கில்பிடேஸி	சிறுகுருஞ்சான்
153.	ஈடியாடிஸ் புபேருலா	ருபியேஸி	இன்புரா
154.	எலிக்ட்ரிஸ் ஐசோரா	ஸ்பெர்குலியேஸி	வலம்புரி
155.	ஈலிக்ட்ரிஸ் இன்டிக்கம்	பொராஜினேஸி	தேள்கொடுக்கு
156.	எமிடெஸ்மஸ் இன்டிகஸ்	பெரிப்லோகேஸி	நன்னாரி
157.	எமிகிராஃபிஸ் கொலரேட்டஸ்	அக்கான்தேசி	முறிகூட்டி
158.	ஐபிஸ்கஸ் கனாபினஸ்	மால்வேஸி	புளிச்சாகீரை
159.	ஐபிஸ்கஸ் ரோசா சைனன்ஸிஸ்	மால்வேஸி	செம்பருத்தி
160.	ஐபிஸிகஸ் சப்டாரிப்பா	மால்வேஸி	புளிச்சாகீரை
161.	ஐபிஸிகஸ் வில்திபோலியஸ்	மால்வேஸி	மஞ்சள்துத்தி
162.	ஐப்பான்தஸ் பென்டான்ட்ரா	பிராக்ரடேஸி	ஓரிலை தாமரை
163.	ஹிட்னோ கார்பஸ் பென்டான்ட்ரா	பிராக்ரடேஸி	மரவெட்டி
164.	ஐக்ரோபில்லா ஆரிகுலேட்டா	அக்கான்தேசி	நீர்முள்ளி
165.	இப்டிஸ் காவியோலன்சிஸ்	லேபியேஸி	

வரிசை எண்	தாவர இனப்பெயர்	குடும்பவகை	தமிழ் பெயர்
166.	இம்பாசியன்ஸ் பால்காமியானா	பால்காமினேசி	பால்சம்
167.	இம்பாசியன்ஸ் பால்காமியானா	பால்காமினேசி	ஓரிதழ் தாமரை
168.	இன்டிகோபெரா ஆஸ்பாலதாய்டிஸ்	ஃபேபேசி	சிவனார் வேம்பு
169.	இன்டிகோபெரா டிங்க்டோரியா	ஃபேபேசி	நீலி அவுரி
170.	இன்டோனாசினா எக்கியாய்டிஸ்	அக்கான்தேசி	கோபுரம் தாங்கி
171.	ஐபோமியா அப்ஸ்கூரா	கான்வாலுலேசி	தாளிக்கீரை
172.	ஐபோமியா பாடேடஸ்	கான்வாலுலேசி	சக்கரைவள்ளி
173.	ஐபோமியா பெர்ஸ்தேப்ரி	கான்வாலுலேசி	முயல்காதிலை
174.	ஐபோமியா குயாம்கில்பி	கான்வாலுலேசி	மயில்மாணிக்கம்
175.	ஜாஸ்மினம் ஸ்பிஸிஸ்	ஒலியேஸி	பிச்சிப்பூ
176.	ஜட்ரோபா கர்கஸ்	யூபோர்பியேஸி	காட்டாமணக்கு
177.	ஜட்ரோபா காசிப்பிபோலியா	யூபோர்பியேஸி	கிவாமணக்கு
178.	ஜஸ்டிசியா ஆடாதோடா	அக்கான்தேசி	ஆடாதோடா
179.	கலன்கோ பின்னேட்டா	கிராசுலேஸி	ரனக்காஸ
180.	ஜட்ரோடிஸ் ஃபெஸ்டிடஸ்	குக்கர்பிடேஸி	அப்பக்கோவை
181.	லேஜினேரி வல்காரிஸ்		சூரைக்கொடி
182.	லாவ்சோனியா என்னர்மிஸ்	லித்ரேசி	மருதாணி
183.	லேப்டாபினியா ரெட்டிகுலேட்டா	ஆஸிகிலிபிடேசி	பாலைக்கொடி
184.	லுயுகஸ் ஆஸ்பர்	லேபியேஸி	தும்பை
185.	லிமோனியா அசிட்டிஸிமா	ரூட்டேசி	விலா
186.	லுட்லிக்கியா ஆக்டோவாலிஸ்	ஒனகரேசி	நீர்கிராம்பு
187.	மதுக்கா லாங்சிபோலியா	சபோடேசி	நாட்டு இலுப்பை
188.	மதுக்கா லாங்கிபோலியா	சபோடேசி	காட்டு இலுப்பை
189.	மஜோர்ன ஆர்டன்ஸிஸ்		மருகு
190.	மன்ஜிபெரா இன்டிகா	அனகாடியேசி	மா
191.	மானிகாட் ஏஸ்கிலேன்டஸ்	யுபோர்பியேஸி	மரவள்ளிகிழங்கு
192.	மரண்டா அருண்டுனேஸி	மரண்டோஸி	அரோரூட்
193.	மரண்டா அருண்டுனேஸி	மரண்டோஸி	அரோரூட் கிழங்கு
194.	மார்சீலியா மைனுரட்டா		நீர்ஆரை
195.	மீலியா டூபியா	மீலியேஸி	மலைவேம்பு
196.	மிலிங்டோனியா ஆர்டன்ஸிஸ்	பிக்னோனியேசி	மரமல்லி
197.	மிமிசிலான்இடுல்	மெலஸ்டமேஸி	காயாம்பு
198.	மென்தா ஆர்வன்ஸிஸ்	லேமியேஸி	புதினா
199.	மெரிமியா ட்ரைபென்டாட்	கன்வால்வுலேசி	அம்மையர்குண்டல்
200.	மியூகா பெரேரிகா	இலிசியேசி	மங்கு
201.	மைமோசாபூடிகா	மைமோசேசி	தொட்டால் சுருங்கி
202.	மிராபிலிஸ் ஜலாபா	நிக்டாஜினேசி	அந்திமல்லி
203.	முல்லுக்கோ செர்லியானா	அஜோயேஸி	பர்பதாகம்
204.	மொரின்டா பியூபஸன்ஸ்	ரூபியேசி	நுணா
205.	மொரிங்கா டெரிகோஸ்பேர்மா	மொரிங்கேசி	முருங்கை
206.	முக்குனா பூருரியன்ஸ்	பேபேசி	பூனைக்காலிமுடி
207.	முக்குனா பூருரியன்ஸ்	பேபேசி	பூனைக்காலி
208.	முக்கியா மெட்ராஸ்பட்டனா	குக்கர்பிடேஸி	முசுமுசுக்கை

வரிசை எண்	தாவர இனப்பெயர்	குடும்பவகை	தமிழ் பெயர்
209.	மார்டானியா க்ளாக்கா	சுமன்யேஸி	
210.	முர்ரையா கொய்னகி	ரூடேஸி	கருவேப்பிலை
211.	முசாபாரடைசிகா	முயூசேசி	வாழை
212.	மிரிஸ்டிகா டேக்டிகலாய்டிஸ்	மிருஸ்டிகேஸி	ஜாதிக்காய்
213.	மிரிஸ்டிகா பிராக்கரன்ஸ்	மிருஸ்டிகேஸி	ஆடிப்பழம்
214.	மைசோபைரம் செராட்டுலம்	ஒலியேஸி	சடுமுலை
215.	நேக்சியம் ஒலியான்டர்	அப்போசைனேஸி	அரளி
216.	நீலகிரியான்தஸ் சிலியேட்டஸ்	அக்கான்தேசி	கருங்குறுஞ்சி
217.	நோட்டோனியா கிரேன்டீபுளோரா	ஆஸ்ட்ரேசி	முன்காதுஇலை
218.	நிக்டான்தஸ் ஆர்போர்ட் ரிஸ்டிஸ்	நிக்டான்தேசி	பவழமல்லி
219.	ஒசிமம்பேசிலிக்கம்	லேபிடேசி	திருநிற்றுபச்சிலை
220.	ஒசிமம்காம்போர்	லேபிடேசி	கற்பூரதுளசி
221.	ஒசிமம் கிராடிசிசிமம்	லேபிடேசி	ராமதுளசி
222.	ஒசிமம் டினிபுளோரம்	லேபிடேசி	நல்லதுளசி
223.	ஒலியாடையாகா	ஒலியேசி	காட்டுமல்லி
224.	ஒரோசைலம் இன்டிகம்	பிக்னோனியேஸி	பெருகுவாகை
225.	அக்சாலிஸ் கார்னிகுலேட்டா	ஆக்சாலியேஸி	புளியாரை
226.	பேசிக்கோனி ஓவேட்டா	பேனிஸ்பேர்மேசி	காட்டுகொடி
227.	பர்மிலியா பேர்லேட்டா		கல்பாசம்
228.	பாசிப்புளோரா எகுலி	ஃபாசிபுளோரேசி	தாட்புட்கொடி
229.	பாசிப்புளோரா ஃப்பொய்டிடா	ஃபாசிபுளோரேசி	பூனை கொடுக்கான்
230.	பவோனியா னஜலானிக்கா	மால்வேஸி	சிட்ரமுடி
231.	பெடாலியம் முரக்ஸ்	பேடாலியேஸி	ஆனைநெருஞ்சி
232.	பெர்குலாரியாடேமியா	ஆஸ்க்கிலம்பேஸி	வேலிபருத்தி
233.	பைலா நூடி ஃபுனோரா	வெர்பினேஸி	பொடுதலை
234.	ஃபில்லான்தஸ் அமரஸ்	யூபோர்பியேசி	கீழாநெல்லி
235.	ஃபில்லான்தஸ் எம்பிலிக்கஸ்	யூபோர்பியேசி	நெல்லி
236.	ஃபில்லான்தஸ் ரெட்டிக்கிலேட்டா	யூபோர்பியேசி	நீர் புலான்
237.	ஃபில்லான்தஸ் ஸ்ப்பிஸிஸ்	யூபோர்பியேசி	மேலா நெல்லி
238.	பைபர் லான்கம்	பைபரேஸி	திப்பிலி
239.	பைபர் னநகரம்	பைபரேஸி	மிளகு
240.	பிலகாட்ரான்தஸ் அம்பாய்னிக்கஸ்	லேமியேஸி	கற்பூரவல்லி
241.	பிலகாட்ரான்தஸ் பார்பேடஸ்	லேமியேஸி	
242.	பூளுமேரியா ஆல்பா		ஏதுசெண்பகம்
243.	பிளம்பகோ இன்டிகா	ஃபிளம்பாஜினேஸி	செங்கொடிவேலி
244.	பிளம்பகோ னஜாலானிக்கா	ஃபிளம்பாஜினேஸி	வெண்கொடிவேலி
245.	போகோஸ் டெமன் பச்சொளி	லேமியேஸி	கருடா பட்சி
246.	பாலிகலா எலாங்கேட்டா	பாலிகலேஸி	பெரியா நங்கை
247.	பாலிகோனம் கிளாப்ரம்	பாலிகலேஸி	அக்கரை காரம்
248.	பொங்காமியா பின்னேட்டா	ஃபேபேஸி	புங்கன்
249.	ஃபோர்டுலக்கா ஒலிரேசியே	போர்டுலக்கேஸி	பருப்புகீரை
250.	ஃப்போஜோல்ஜியா ஜிட்னிக்கா	அர்ட்டிகசேசி	காலுருஞ்சி
251.	ஃபுரோஸோபிஸ் ஆல்பா	மைமோஸேஸி	

வரிசை எண்	தாவர இனப்பெயர்	குடும்பவகை	தமிழ் பெயர்
252.	ஃபுருனஸ் குனிங்டாலிஸ்	ரோஸோஸி	பாதாம் பருப்பு
253.	சைடியம் குவவா	மிர்டேஸி	கொய்யா
254.	ப்டீரோ கார்பஸ் மார்சூப்பியம்	ஃபேபேஸி	வேங்கை
255.	ப்டேரிகோட்டா எலேட்டா	ஸ்டெர்குலியேஸி	குதிரை தொண்டி
256.	ராவுல்பியா செர்பன்டீனா	அஃபோசைனேஸி	கர்பகந்தி
257.	புனிக்கா கிரானாட்டம்	பூனிக்கேஸி	மாதுளை
258.	ராவுல்பியா டெட்ராபில்லா		பாம்புகளா
259.	ரிக்கான்தஸ் நாசுட்டஸ்	அக்கான்தேஸி	அரியாநங்கை
260.	ரோசா டமாசீனா	ரோசேசி	ரோஜா
261.	ரூட்டா கெலப்பன்ஸிஸ்	ரூட்டேஸி	அருவதா
262.	சக்காரம் ஸ்பான்டேனியம்	போயேஸி	(நாணல்) சின்னாலி
263.	சால்வடோரா பெர்சிக்கா	சால்வடோரேஸி	காலர்வாரை
264.	சென்ஸிவீரியா திரிஸ்போலியா	அகவேஸி	உருவன்தண்டு
265.	சென்ஸ்வீரியா ராக்ஸபர்ஜியானா	அகவேஸி	தாடைய்
266.	சான்டெல்லம் ஆல்பம்	சான்டலேஸி	சந்தனம்
267.	சேப்பின்டஸ் இமார்ஜ்னேட்டஸ்	சேப்பின்டேஸி	பூச்சை
268.	சேப்பின்டஸ் லாரிஃபோலியா	சேப்பின்டேஸி	பூச்சைவாகை
269.	சராக்கா அசோகாஃ	சீகால்பினியேஸி	அசோகா
270.	சார்க்கோஸ்டைம்மா அசிடம்	ஆஸ்கில்பிடேஸி	ஆட்பன்கொடி
271.	சரோப்பஸ் அன்ட்ரோகைனஸ்	ஈயுபோர்யேஸி	தவசுமுருங்கை
272.	சிடாராம்பிஃபோலியா	மால்வேஸி	அரிவாள் மூக்கு
273.	சில்லா அயாசின்தினி	லில்லியேஸி	காட்டுஉல்லி
274.	ஸ்கோப்பாரியா டல்ஸி	ஸ்கார்புலரேஸி	சாரக்கொடி
275.	செஸ்பானியா கிராண்டி ஃபுளோரா	ஃபேபேஸி	அகத்தி
276.	செஸ்பானியா செஸ்பான்	ஃபேபேஸி	சித்தகத்தி
277.	சிடா அகுட்டா	மால்வேஸி	அரிவாள்மனைபூண்டு
278.	சிடா கார்டேட்டா	மால்வேஸி	பழம்பாசி
279.	சைமாருபா கிளாக்கா	சைமரூபேஸி	சொர்க்கமரம்
280.	சொலேனம் ஸ்பீஸிஸ்	சோலனேஸி	மலைகத்திரி
281.	சோலேனம் ஜாக்குன்னி	சோலனேஸி	கண்டங்கத்திரி
282.	சோலேனம் நைக்ரம்	சோலனேஸி	மணத்தக்காளி
283.	சோலேனம் ஃபியுப்சன்ஸ்	சோலனேஸி	மலைசுண்டை
284.	சோலேனம் சூராடென்ஸிஸ்	சோலனேஸி	முள்ளுக்கத்திரி
285.	சோலேனம் டார்வம்	சோலனேஸி	சுண்டை
286.	சோலேனம் ட்ரைலோபேட்டம்	சோலனேஸி	தூதுவளை
287.	ஸ்பேத்தோரேயா கம்பானுலேட்டா	பிக்லோனியேஸி	நீர்பிச்சி
288.	ஸ்பெர்மக்கோஸா இஸ்பிடா	ரூபியேஸி	நாளதசுரி
289.	ஸ்பெர்மக்கோ இன்டிகா	ரூபியேஸி	கொட்டைகரந்தை
290.	ஸ்பைலாந்தஸ் கால்வா	ஆஸ்டேஸி	பால்வலிபூண்டு
291.	ஸ்டக்கிடார் பிட்டா அட்ரிக்கிபோலியா	வேர்பனேஸி	எழுத்தாணிப் பூடு
292.	ஸ்ரைக்னஸ் நக்ஸ் வாமிகா	லோகானியேஸி	எட்டி
293.	சைஜீஜியம் அரோமேட்டிகம்	மிர்டேஸி	கிராம்பு
294.	சைஜீஜியம் குமினி	மிர்டேஸி	நாவல்

வரிசை எண்	தாவர இனப்பெயர்	குடும்பவகை	தமிழ் பெயர்
295.	டாபர்மான்டனா கோரனேரியா	அப்போனசனேஸி	நந்தியாவட்டை
296.	டலியானம் குனிபோலியம்		பருப்புகீரை
297.	டாம்மரின்டஸ் இன்டிகஸ்	சீசால்பீனேஸி	புளி
298.	டெக்டோனா கிரான்டிஸ்	வெர்பனேஸி	தேக்கு
299.	டெர்மினேலியா அர்ஜுனா	காம்பர்டேஸி	மருதமரம்
300.	டெர்மினேலியா பெல்லரிக்கா	காம்பர்டேஸி	தானி
301.	டெர்மினேலியா கட்டப்பா	காம்பர்டேஸி	வாதம்
302.	டெர்மினேலியா செப்புலா	காம்பர்டேஸி	கடுக்காய்
303.	டெஸ்பிஸியா பாப்புல்னியா	மால்வேஸி	பூவரசு
304.	டினோஸ் போரா கார்டிபோனயா	மேனிஸ்பெர்மேஸி	சீன்தில்
305.	டிட்ச்னியா டைவர்ஸிபோலியா	சான்ராகான்தா	
306.	டொடாலியா ஆசியட்டிகா	ரூட்டேசி	மிளகரனை
307.	ட்ரையான்திமா டெக்கான்ரா		ஜாதிகரனை
308.	ட்ரிபுலஸ் டெரஸ்ட்ரிஸ்	ஜைகோபிலேஸி	நெருஞ்சி
309.	ட்ரைடக்ஸ் ப்ரோக்கம்பன்ஸ்	ஆஸ்ட்ரேஸி	கிணற்றுபாசான்
310.	ட்ரைகோநேல்லா பீனம்கிரேகம்		வெந்தையம்
311.	டைலோபோரா இன்டிகா	ஆஸ்கிலிபிடேஸி	வள்ளிபாலை
312.	டைபோனியம் ட்ரைலோபேட்டம்	ஏரேஸி	கருணைகிழங்கு
313.	அர்ஜுனியா இன்டிகா	லில்லியேஸி	காட்டு உல்லி
314.	வைட்டகஸ் லிகோஜைலான்	வெர்பனேஸி	நீர்நொச்சி
315.	வைட்டகஸ்நெகுன்டோ	வெர்பனேஸி	நொச்சி
316.	வித்தேனியா சோமினிபேரா	சொலனேஸி	அமுக்கரான்
317.	ரைட்டியா டிங்டோரியா	அப்போசைனேஸி	வெப்பாலை
318.	ஜீனிரியா ஸ்கேப்ரா		ஆகாசகருடன்
319.	ஜீன்ஜிபர் அப்பிசிநாலிஸ்	ஜீன்ஜிபரேஸி	இஞ்ஜி
320.	ஜிஜீபஸ் மாருட்டியானா	ராம்னேஸி	எலந்தை
321.	ஜிஜீபஸ் ஈனோப்ளியா	ராம்னேஸி	சூரி

2. ப்ருக் ஹாம்டன் மையம் - உதகை

வரிசை எண்	தாவரவியல் பெயர்	குடும்பவகை	தமிழ் பெயர்
1.	அகிலியா மிலிபோலியம்	கம்போசிட்டே	யரோவ்
2.	அகிராந்தஸ் ஆஸ்பர்	அமரந்தேஸி	நாயுருவி
3.	அக்கோரஸ் கலாமஸ்	ஏரேஸி	வசம்பு
4.	அலோ பார்படேன்ஸிஸ்	லில்லியேஸி	சோற்றுகற்றாழை
5.	அர்ட்டிமிஸியா நீலகிரிக்கா	கம்போசிட்டே	
6.	அர்ட்டிமிஸியா அப்ரோட்டேனம்	கம்போசிட்டே	மரிக்கொழுந்து
7.	பெர்பெரிஸ் டிங்க்டோரியா	பெர்பெரிடேஸி	ஊசிக்களா
8.	பைடன் ஸ்பீஸிஸ்	கம்போசிட்டே	பைடனஸ்
9.	சென்ட்டல்லா ஆசியாட்டிகா	ஏபியேஸி	வல்லாரை
10.	செப்பலான்ரா இன்டிகா	இக்கர்பிடேஸி	கோவை
11.	கேமோமீலம் நேபிலி	கம்போசிட்டே	கேமேமயில்
12.	க்ரைசான்திமம் சைனர் அரிபோரியம்	கம்போசிட்டே	பைராத்திரம்

வரிசை எண்	தாவரவியல் பெயர்	குடும்பவகை	தமிழ் பெயர்
13.	க்ரைசான்திமம் பார்தினியம்	கம்போசிட்டே	பீவர்∴ப்யூ
14.	சைநோட்டான் டேக்டிலான்	கிராமினே	அருகம்புல்
15.	சைநோகுலோசம் பர்கேட்டம்	கிராமினே	காக்காதழை
16.	சைபோமான்ரா பிடேகா	சோலனேஸி	ட்ரிடொமேட்டோ
17.	டட்டுரா ஸ்ட்ரோமோனியம்	சோலனேஸி	தார்ன்ஆப்பிள்
18.	டீனோத்திரா பைநிஸ்	ஒனகரேஸி	ஈவினிங்பிரைம்ரோஸ்
19.	டிஜிடாலிஸ் பர்புரியா	ஸ்கார்புலரேஸி	பாக்ஸ் க்லாவ்
20.	டொடோனியா விஸ்கோஸா	சேப்பின்டேஸி	விராலி
21.	பொகோஸ்டெமான் பச்சொலி	லேபியேட்டே	பட்சோலி
22.	இலைய்க்னஸ் கன்பேரட்டா	இலியாக்னேஸி	குரங்குபழம்
23.	யுபடோரியம் கிலாண்டுலோஸம்	கம்போசிட்டே	கரிக்கட்டான்
24.	∴ப்ராகேரியா ஸ்பீஸிஸ்	ரோஸேஸி	கார்டன் ஸ்ட்ராபரி
25.	∴ப்ராகேரியா விஸ்கா	ரோஸேஸி	ஒயில்டு ஸ்ட்ராபரி
26.	கல்த்தீரியா ∴ப்ராக்ரட்டீஸிமா	எகிக்கேஸி	கல்தீரியா
27.	ஐபிஸ்கஸ் ரோசசைனன்ஸிஸ்	மால்வேஸி	செம்பருத்தி
28.	லாவண்டுலா அங்கிஸ்டி போலியா	லேபியேட்டே	லாவேண்டர்
29.	லியூக்ஸ் ஆஸ்பர்	லேமியேஸி	தும்பை
30.	லிப்பியா சிட்ரியோடரா	வெர்பனேஸி	லிப்பியா
31.	லொபிலியா எக்சசெல்ஸா	கம்பானுலேஸி	காட்டுபுகையிலை
32.	லொபிலியா நிக்கோட்டியானா	கம்பானுலேஸி	புகையிலை
33.	மென்தா பைப்பரேட்டா	லேமியேஸி	புதினா
34.	மென்தா ஜென்டிலிஸ்	லேமியேஸி	காட்டுபுதினா
35.	மென்தா சட்டைவா	லேமியேஸி	புதினா
36.	மைமோசா பூடிக்கா	மைமோசேஸி	தொட்டாசினுங்கி
37.	மிராபிலிஸ் ஜலாப்பா	நிக்பாஜினேஸி	அந்திமல்லிகை
38.	முல்லுகோ செர்வியானா	∴பைக்காடேஸி	பர்படாகம்
39.	மொரிண்டா டிண்டோரியா	மொரிங்கேஸி	நூநா
40.	மொரிங்கா ஒலிப்பெரா	மொரிங்கேஸி	முருங்கை
41.	ஒசிமம் பேசிலிக்கம்	லேமியேஸி	திருநீறுபச்சிலை
42.	ஒசிமம் கிலிமஞ்சரிக்கம்	லேமியேஸி	காட்டுதுளசி
43.	ஒரிகானம் வல்கேர்	லேபியேட்டே	ஒரிகானம்
44.	பிலாகோனியம் க்ராவியோலன்ஸ்	ஜெரானியேஸி	ஜெரானியம்
45.	பெட்ரோஸிலியம் கீரிஸ்பம்	அம்பிலிப்பெரே	பார்ஸ்லி
46.	பைட்டலோக்கா டையோக்கா	பைட்டலோகேஸி	காக்காசெடி
47.	பைபர் லாங்கம்	பைபரேஸி	திப்பிலி
48.	ரோடோ மிர்டஸ் டொமன்டோசா	மிர்டேஸி	தவட்டுசெடி
49.	ரெஸினஸ் கமுனிஸ்	யூபோர்பியேஸி	ஆமணக்கு
50.	ரோஸ்மேரியம் அபிஸினாலிஸ்	லேபியேட்டே	ரோஸ்மேரி
51.	ரூபியா கார்டிபோலியா	ரூபிபேஸி	மன்ஜிஸ்தா
52.	ரூபஸ் எலிப்டிக்கஸ்	ரோஸேஸி	முள்பழம்
53.	ரூபஸ் இடேக்கஸ்	ரோஸேஸி	கேப்கோஸ்பெரி
54.	ரூட்டா கிராவியோலன்ஸ்	ருட்டேஸி	அருவதா
55.	சால்வியா அ∴பிஸ்னாலிஸ்	லேபியேட்டே	ஸேஜ்

வரிசை எண்	தாவரவியல் பெயர்	குடும்பவகை	தமிழ் பெயர்
56.	சோன்டோலினா கேமோசைபஸ்	கம்போஸிட்டே	மரிக்கொழுந்து (வெள்ளை)
57.	ஸமைலாக்ஸ் ஆஸ்பரா	லில்லியேஸி	பரங்கைக்காய்
58.	சோலோனம் டுவாக்காமிரா	சோலனேஸி	காட்டுத்தக்காளி
59.	சோலோனம் ஜாக்குனி	சோலனேஸி	கண்டங்கத்திரி
60.	சோலோனம் நைக்கரம்	சோலனேஸி	மணத்தக்காளி
61.	சோலோனம் ஸ்பீஸிஸ்	சோலனேஸி	பாப்பினா
62.	ஸ்ரோபிலாந்தஸ் சிலியேட்டா	அக்கான்தேஸி	கருங்குறிஞ்சி
63.	டிஜிட்டஸ் மைநுட்டியே	கம்போசிட்டே	டிஜிட்டஸ்
64.	தைமஸ் செர்பிலம்	லேபியோட்டே	வைல்ட் தைம்
65.	தைமஸ் வல்காரிஸ்	லேபியோட்டே	தைம்
66.	டொட்டாலியா அக்கிலியோட்டோ	ரூட்டோஸி	காட்டுமிளகு
67.	ட்ரடேஸ் கான்ஸிலியே விர்ஜினானா	காமாலியோஸி	ட்ராடேன்ஸ்செல்வா
68.	டாராசோக்கம் அ∴பிஸினாலிஸ்	வெலாரினியேஸி	வெலைரியான்
69.	யூலெக்ஸ் யூரோபெயஸ்	பேப்பிலனேஸி	பன்னிமுள்ளு
70.	வெலாரியான் அ∴பிசினாலிஸ்	வெலாரிபியேஸி	வெலாரியான்
71.	வெட்டிவேரியா ஜைஸினாயிடிஸ்	கிராமினே	வெட்டிவேர்
72.	வின்காரோசியா	அபோசிப்ரேஸி	நித்தியகல்யாணி
73.	பக்ஸஸ் செம்பர்வைரன்ஸ்	பக்கேசி	
74.	சினரேரியா மார்டிம		சினரேரியா
75.	கெமோமேலம் நொபைபில்	கம்போசிட்டே	கேமோமேலம்
76.	ஹெலிக்ரைசம் ஆரினேரியம்	கம்போசிட்டே	வாடாமல்லி
77.	லியோன்டடான் ஹிஸ்பிடஸ்	கம்போசிட்டே	ர∴ப்ஹாக்பிட்
78.	மென்தா ஸ்மிதியானா	வெர்பனேசி	புதினா
79.	ஏரிகானம் மார்ஜரோனா	லேபியேடே	மார்கோரம்
80.	சொலேனம் மூரிகேடம்	சொலனேசியே	லேப்பினோ
81.	சால்வியா	லேபியேட்டே	ரெட்சேஜ்
82.	ஸ்ட்ரொபைலான்தஸ் குன்தியானஸ்	அக்கேன்தேசி	குறிஞ்சி
83.	டாகடஸ் மைனாடே	காம்போசிடே	
84.	வயோலா ஒடரேட்டா		வையலெட்
85.	அம்மிமேஜஸ்		
86.	அல்பினியா கலங்கா	ஜின்ஜிபெரேசி	சித்தரத்தை
87.	பேசல்லாரூப்ரா		பசலைக்கீரை
88.	சிம்பொபோகன் சிட்ரேடஸ்		எலுமிச்சை புல்
89.	கொலகேசியா எஸ்குலென்டா	அரேசியே	கருவேம்பு
90.	∴போனிகம் வல்கேர்		சோம்பு
91.	ஹைபிஸ்கஸ் ரோசாசைனன்ஸிஸ்		செம்பருத்தி
92.	ஹைட்ரோகோன்ரா ஸ்பிஸிஸ்		நைட்குயின்
93.	ஐபோமியா பட்டாஸ்	கன்வால்வுலேசி	சக்கரைவள்ளி
94.	வெடேலியா சைனன்ஸிஸ்	ஆஸ்ட்லேசி	மஞ்சள் கரிசாலை
95.	கொரியான் எம்சடைவம்		கொத்தமல்லி
96.	சொலேனம் சூரட்டன்ஸ்	சொலனேசி	கண்டங்கத்திரி
97.	அடியான்தம் கேபில்லஸ்		மெயடன்ஹேர்
98.	ஹைபெரிகம் மைசூரென்ஸ்	ஹைபெரிகேசி	காட்டுபாக்கு

6. மூலிகையின் எதிர்காலம்

மூலிகை மருத்துவம் என்பது இயற்கையோடு இணைந்த விசயம், பக்க விளைவுகள் பற்றிய பயமோ, மேற்கத்திய மருத்துவத்தைப் போல வாழ்நாள் சேமிப்பைக் கரைந்து கடனாளியாக்கும் பயமோ இல்லாமல் எளிய மற்றும் மலிவான மருத்துவ முறையாக இருப்பதால் உலக மக்களின் கவனம் இம்மருத்துவ முறைகளின் பால் திரும்பியுள்ளது. உலக மக்கள் தொகை தொடர்ந்து கூடி வருவதால் அதுவும் சுற்றுச்சூழல் வேறுபாடுகளால் புதிய புதிய நோய்கள் தோன்றி வருவதால் இம்மருத்துவ முறைகளைக் கையாளத் தேவையான மூலிகைத் தாவரங்களின் தேவை தொடர்ந்து அதிகரித்து வருவதற்கான வாய்ப்புகளே அதிகம். அதே சமயம் இந்தக் கூடுதல் தேவை நிச்சயம் நமது நாட்டின் இயற்கை வளங்களான வனம் மற்றும் தாவரங்களின் செறிவிடங்கள் (Habitat) மீது அதிக தாக்கத்தை ஏற்படுத்துவது நிச்சயம். இயற்கை வாழ் இடங்களில் உள்ள தாவரங்களை சட்ட விரோதமாகக் கடத்திச் செல்ல வாய்ப்புகள் அதிகம். அதே சமயம் இந்தத் தாவரங்களை நன்கு பாதுகாத்து நீண்ட நெடிய நீடித்த நிலையான அறுவடைக்கு வழி வகுத்து இத்தாவரங்களைப் பெருக்கி வளர்த்து அறுவடை செய்யத் தேவையான தொழில் நுட்பங்களை உருவாக்கி மூலிகைத் தாவரங்களை சட்டரீதியான ஒழுங்கு முறைக்கு உட்படுத்தி, வாணிபம், அறிவு சார்ந்த சொத்துரிமை, அடிப்படை வேதியியல் பொருட்களின் பகுப்பாய்வு போன்றவற்றை முறைப்படுத்தி நடவடிக்கை மேற்கொண்டால் இயற்கையில் இவற்றின் பாதுகாப்பிற்கு வழி கிடைப்பதோடு ஏற்றுமதி, சொத்துரிமை கிரயம் (Royalty) ஆகியவற்றின் மூலம் நாட்டின் வருவாய் உயரும். அதே சமயம் நாட்டின் நிலப்பயன்பாடு மேம்படுத்தப்பட்டு தரிசு நிலங்கள் குறைந்து உற்பத்தித் திறன் கூடும். தனிநபர் வருமானமும், தேசியவருவாயும் கூடும். இதனை நன்கு உணர்ந்தே அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இன்றைய நிலையில் உலக மூலிகை ஏற்றுமதியில் சுமார் ரூ. 500 கோடிய ளவிற்கு மட்டுமே உள்ள இந்திய வர்த்தகம் ரூ. 62 மில்லியன் டாலர் உள்ள உலக வர்த்தகத்துடன் ஒப்பிடுமுறையில் 0.2 சதம் மட்டுமே. தனது இருப்பிட வசதி உயிர்ப் பன்மை செறிவு, உள்ளார்ந்த உற்பத்தித்திறன் (Potentional) ஆகியவற்றை இந்தியா முழுமையாக திறமையாக பயன்படுத்தினால் அடுத்த சில ஆண்டுகளில் ஏற்றுமதி பன்மடங்கு பெருகி தேசிய வருவாய் அதிகரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் பிரகாசமாக உள்ளது. நாட்டின் உயிர் பன்மை இழப்பு ஏற்படாத வகையில் ஏற்றுமதி இறக்குமதி கொள்கை வகுத்து மத்திய, மாநில மூலிகை வாரியங்களின் செயல்பாடுகளில் வடிவமைப்பு செய்து உள்ளூர் தேவைகளை முழுமையாக நிறைவுசெய்து ஏற்றுமதி வாய்ப்புகளை தேடிச் சென்றால் மூலிகைத்துறைக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டு.

7. விவசாயம் மற்றும் விவசாய உத்திகள்

மூலிகை விவசாயம் என்பது ஒரு புதியதுறை. சில மூலிகைஇனங்களைத் தவிர பெரும்பாலானவை நாளது வரை இயற்கை வாழிடங்களிலும், வனங்களி லும்தான் சேகரம் செய்யப்பட்டு வருகிறது. எனவே விவசாயம் செய்ய விரும்புவோர் அரசுத் துறைகளை அணுகி, தெளிவான தொழில் நுட்பம் உள்ள தாவர இனங்களை மட்டுமே தெரிவு செய்து விவசாயம் செய்ய வேண்டும். விதை மற்றும நடவுப் பொருட்களை சம்பந்தப்பட்ட துறை அல்லது தெளிவான அறிவு மற்றும் ஏமாற்று நோக்கு இல்லாதவர்களிடம் பெற்று நடவுப்பணி மேற்கொள்ள வேண்டும். புதிதாக மூலிகை விவசாயம் செய்ய விழைவோர் அகலக் கால் வைக்காமல் குறைந்த பரப்பில் பயிர் செய்து அனுபவம் பெற்றபின் அதிக பரப்பில் பயிர் செய்ய முன் வரவேண்டும். எந்த மூலிகை விவசாயமாக இருந்தாலும் விற்பனை வசதி பற்றி எழுத்து மூலமான ஒப்பந்த அடிப்படையில் அதனை விற்க வசதிகளை செய்தபின் பயிர் செய்வது நலம்.

தனது நிலத்தின் தன்மை, நீர் ஆதாரம் போன்றவற்றின் அடிப்படையில் பயிர் செய்வது நல்லது. இறுதியாக மூலிகைப் பயிர் செய்ய தற்போது பயிர் செய்யும் விவசாயப் பயிரை நிறுத்தி மூலிகைக்கு தாவுவது சரியல்ல. மூலிகை விவசாயம் கூடுதல் பலனைப் பெற்றுத் தரும் அல்லது தரிசு நிலத்தை இலாபகரமாக பயன்படுத்த முடியும், அல்லது ஒப்பு நோக்கில் மூலிகை விவசாயம் இலாபத்தைத் தரும் என்றால் மட்டுமே மூலிகைப் பயிர் செய்யலாம்.

விவசாய உத்திகள்

ஏற்றுமதியை மட்டுமே நோக்கமாகக் கொள்ளாமல் உள்ளூர் தேவையை நிறைவு செய்யும் நோக்கில் தரமான பொருட்களை வழங்கினால் வியாபாரம் நிலைப் பெறும். ஏற்றுமதி செய்ய விரும்புவோர் வங்கிகளில் உதவி பெற்று செய்வதால் ஏமாற்றப் படுவதைத் தவிர்க்கலாம். தாவரங்களை அப்படியே விற்பனை செய்யாமல் மதிப்புக் கூட்டும் வழிகளை ஆராய்ந்து செய்தால் கூடுதல் வருவாய்க்கு வழி கிடைக்கும். திறமை படைத்தோர் தொழிற்சாலைகளை நிறுவி மூலிகைகளின் வேதிப் பொருட்களை பிரித்தெடுத்து விற்பனைக்குக் கொண்டு செல்லலாம். அது தொழில் வாய்ப்பைப் பெருக்கு வதோடு அதிக இலாபத்தைத்தரும்.

இயற்கை விவசாயம்

மூலிகைகள் பெரும்பாலும் மருந்தாக உட்கொள்ளப்படுவதால் அவற்றை செயற்கை உரம், பூச்சிக் கொல்லிகள் போன்றவற்றைப் பயன்படுத் தாமல் இயற்கை முறையில் விவசாயம் செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அதிகம் உள்ளது. இந்த விவசாய முறை அதிகம் பரவா விட்டாலும் ஆங்காங்கே சிறிய அளவிலான உழவர் கூட்டமைப்புகள் இவற்றில் அதிக ஆர்வமும், அக்கறையும் செலுத்தி இம்முறையைப் பரவ வழி செய்து வருகின்றன. இயற்கை முறையில் உற்பத்தி செய்த விவசாயப் பொருட்கள் என்று சான்றளிப்பு வழங்க சான்றளிப்பு நிறுவனங்கள் தோன்றிவருகின்றன. சான்றளிப்புக்கான செயல் முறைகள் வகுக்கப்பட்டு முறைப்படுத்தப் பட்டால் இந்த மூலிகை ஏற்றுமதி வாய்ப்புகள் பெருகும்.

கூடுதல் உற்பத்தித் திறன்

பல்லுயிர் பாதுகாப்பு உயிர்சார்ந்த உற்பத்தித் திறன் அதிகரிப்பு (Biodiasity Conservation & Bio Productivity Enhancement) என்ற உயரிய சித்தாந்தத்தை தனது அடிப்படையாகக் கொண்ட வனத்துறை தமிழக உழவர்களின் நலனை முன்னிறுத்த தனது ஆராய்ச்சியிப் பணிகளை அமைத்ததன் விளைவாக இன்றைக்கு சுமார் 3000 டன் மண்புழு உரம் உற்பத்தித் திறனையும், 500 டன் வேக வளர்ச்சி வோ்ப்பூசணம் மற்றும் மரத்துக்கென்றே பிரித்தெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்ட அதிக வளர்ச்சிக்கான சரியான கலவை குறித்த நுண்ணுயிரிகள் பற்றிய தொழில் நுட்பம் ஆகியவை வனத்துறையிடம் உள்ளது. இதுபோன்ற தொழில் நுட்பங்கள் மூலிகை விவசாயம் செய்யும் விவசாயிகள் பெற்று உலகில் தனது இருப்பிட வசதியால் சூரிய ஒளியை தனது பிரத்யேக சொத்தாக கொண்ட இந்தியாவில் உழவர்கள் சரியாக திறமையாக சூரிய ஒளியை அறுவடை செய்தால் உற்பத்தி செய்யும் மூலிகைகள் தனது இயற்கை செறிவிடத்தில் (Natural Habitat) உள்ளபோது கொண்டுள்ள இரசாயனப் பண்புகளைக் காட்டிலும் கூடுதலான பண்பு

களைக் கொண் டிருக்கும். நிலத்தின் உற்பத்தி திறன் கூடும். உழவர்கள் அதிக இலாபம் பெற வழி கிடைக்கும்.

கலப்பு பயிர் சாகுபடி

எந்த ஒரு விவசாயமும் தனிப்பயிராக செய்யப்படாமல் ஊடுபயிர் மற்றும் கலப்புப் பயிராக மேற்கொள்ளும் நடைமுறை உலககெங்கும் பரவலாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. கலப் புப் பயிராக செய்யும்போது பூச்சித் தாக்குதல் குறைவு நோய் எதிர்ப்புத் தன்மை, கூடுதல் வரு வாய், திடீரென சந்தை நிலவரம் சாதகமற்ற நிலைக்கு செல்லும்போது கடுமையான பாதிப்பி லிருந்து தப்பித்தல் போன்ற பயன்பாடுகள் உள்ள தால் எந்த மூலிகைப் பயிரையும் கலப்புப் பயிராக மேற்க் கொண்டால் உழவர்களுக்கு பயனுள்ள தாக அமையும்.

கலப்பு பயிராக செய்யும்போது அடுக்குப்பயிராக செய்யவேண்டும். நிழல் தாங்கி வளரும் பயிர்கள் அடையாளம் கண்டு பொறுத்தமான கலப்புப் பயிர்களை தெரிவு செய்து விவசாயம் செய்யவேண்டும்.

மாட்டுக்கோமியம், மாட்டுச்சாணம் மோர், தயிர், நெய், தாவர இலைகள் போன்றவைகளை பயன்படுத்தி பஞ்சகவியம், தசகவியம் என்ற பெயர்களில் பூச்சிகொல்லி மற்றும் இயற்கை உரமாக பயன்படும் கரைசல்கள் தற்போது அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது, நிலத்தின் ஈரத்தை காப்பாற்ற மூடாக்கு, மல்ச்சிங் செய்யும்முறை பின்பற்றப்பட்டுவருகிறது. சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்பு நீர்ப்பாசனம் போன்றவை நீர் சிக்கனம் கருதி மேற்க்கொள்ளப்படும் பாசன முறைகள். இவையும் பின்பற்றத்தக்கவை.

8. மூலிகை வியாபாரம் மற்றும் உத்திகள்

சமீப காலமாக நாட்டு மக்களிடையே மூலி கை வியாபரம், மூலிகை விவசாயம், மூலிகை ஏற்றுமதி போன்ற செய்திகள் அதிக அளவில் கருத்துப் பரிமாற்றம் செய்யப்பட்டு வருகின்றன. மூலிகை வியாபாரம் அல்லது விவசாயம் மேற் கொண்டால் குறுகிய காலக்கெடுவில் அதிக பணம் புரட்டி விடலாம் என்ற மாயை மக்கள் மனதில் எழுந் துள்ளது. இது தவறான நோக்கமாகும். உண்மை என்னவென்றால் 1.1.2005 முதல் உலகமயமாக்கல் கொள்கையினால் நாடுகளுக்கடையே நடைபெற்று வரும் வர்த்தகத்தைத் தற்போது கட்டுபடுத்தி வரும் வர்த்தகத் தடைகள் தகர்த்தப்படும் நிலை உள்ள தால், எந்த நாடும் தனி நபரும் எந்தப் பொருளையும் உலகில் எந்த மூலையிலும் தனக்குக் கட்டு படியாகக் கூடிய விலைக்கு விற்கலாம் என்ற ஒரு நிலை தோன் றும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த நிலையில் வாணிபச்சந்தையில் தரமான பொருட் களை குறைந்த விலைக்கு விற்கும் நிறுவனங்களே வாணிபப் போட்டியை எதிர்கொண்டுவளர முடியும். எனவே இந்தநிலை பல நாடுகளின் தொழில் துறைகள் மீது பெரும் தாக்குதலை தொடுத்து அவை நசிந்து அழியக்கூடிய நிலை தோன்றலாம் என்ற பயம் பலரின் மனதில் எழுந்துள்ளது. எனவே தான் அரசு நமது தொழில் துறைகளில் உற்பத்திப் பெருக்கம் மட்டுமே கருத்தாய்க் கொள்ளாமல் தரம் மற்றும் குறைந்த விலையில் உற்பத்திக்கு வழி வகுக்க தொழில்துறைக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகிறது. நலிவுற்ற துறைகளை நிதி வழங்கி தூக்கி நிறுத்த முயல்வதைவிட திறமையான தனியார் தொழில் விற்பன்னர்கள் எடுத்து நடத்த தனியார் மயமாக்கல் கொள்கையை தேவையான அளவுக்கு கடைப்பிடித்து தொழில்களில் போட்டி யைத் தாங்கி வளரும் தன்மையை ஏற்படுத்த முயற்சி எடுத்து வருகிறது. இது பன்னாட்டு வாணிபச் சந்தை யில் இந்தியத் தொழில்கள் போட்டியை திறம்பட சந்திக்கும் வலிமையைத்தரும் என எதிர்பார்க் கப்படுகிறது.

இத்தகைய வாணிப்போட்டியை எதிர்கொண்டு வளரும் திறமை படைத்த தொழில்கள் அல்லது உலக அரங்கில் தனக்கு போட்டியே இல்லை என்ற நிலையில் உள்ள தொழில்களே 1.1.2005-க்குப் பின் வளரமுடியும் என்ற நிலை உள்ளது. இத்தகைய துறைகளை அரசு அடையாளம்கண்டு அவற்றின் வளர்ச்சிக்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 1.1.2005-க்குப்பின் உலக அரங்கில் திறமையாகப் போட்டியிட்டு வளரக் கூடியதாக அடையாளங்கண்டு கொள்ளப் பட்ட துறைகளில் மூலிகைத் துறையும் ஒன்று.

வெப்ப மண்டலம், மித வெப்ப மண்டலம், தூந்திரப் பிரதேசம் என்ற பலவிதமாக இயற்கைப் பன்மைகளைக் கொண்டிருந்தும், மிக அதிக, உயிரினப் பன்மையை உள்ளடக்கியிருந்தும் உலக மூலிகை ஏற்றுமதியில் சீனா போன்ற நாடுகளோடு ஒப்பிட இயலாத பலவீனமாக நிலையில் இருப்பதைக் கண்ட இந்திய அரசு இத்துறையை வலிமைப்படுத்த முடிவு செய்து நல்ல பல திட்டங்களை தீட்டியுள்ளது.

உயர்நிலைக் குழு ஒன்றினை அமைத்து அதன் பரிந்துரையைப் பெற்று அதன் மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது. தேசிய மற்றும் மாநில மூலிகை வளர்ப்பு வாரியங்கள் ஏற்படுத்தப்பட்டு தொழில் நுட்பம், வாணிப உத்தி, நிதி உதவிபோன்றவை தங்கு தடையில்லாமல் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஏற்றுமதி, இறக்குமதி வங்கி, நபார்டு உள்ளிட்ட இதர வங்கிகளும் நிதி நிறுவனங்களும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

மூலிகைப் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள அரசுத் துறைகளும், பல அரசுசாரா நிறுவனங்களும், மூலிகை ஆராய்ச்சிப் பகுப்பாய்வில் ஈடுபட்டுள்ள கல்வி நிறுவனங்களும் அரசால் சிறப்பாக ஊக்குவிக்கப படுகின்றன.

விவசாயத்துறை, தோட்டக்கலை துறை உள்ளிட்ட துறைகள் மூலிகை வளர்ப்பிலும், வனத்துறை உள்ளிட்டவை மூலிகைப் பாதுகாப்பிலும் சிறப்புக் கவனம் செலுத்தி செயல்பட வழி முறைகள் வகுக்கப்பட்டு வருகின்றன. மூலிகை வளர்ப்பு வாரியங்கள் சட்டபூர்வ அதிகாரங்களைப் பெறும் பொழுது மூலிகை வாணிபமும், விவசாயமும் மேன்மேலும் ஒழுங்கு படுத்தப்படும் என்பது நிச்சயம்.

மூலிகை வியாபாரத்தில் நடுநிலை வகிக்கும் வியாபாரிகளைக் காட்டிலும் இடைத்தரகர்களும், ஏமாற்றி பிழைப்பு நடத்துபவர்களின் எண்ணிக்கையுமே அதிகம். ஏழை விவசாயிகளுக்கு மூலிகைச்சந்தை பற்றிய அறிவும், விழிப்புணர்வும் இல்லாதிருப்பதால் வியாபாரிகள் அவர்களின் உற்பத்தி பொருட்களை அடிமாட்டு விலைக்கு வாங்கிச்செல்ல முயற்சிக்கிறார்கள்.

சரியான சந்தை முறை ஏற்படுத்தப்பட்டு உற்பத்திப் பொருட்கள் விலைபோகும் என்ற நிலை ஏற்படும் வரை பயிர் பாதுகாப்புக்கு இன்சூரன்ஸ் வசதி ஏற்படும் வரை விவசாயிகள் அதிக ஆசைப்படாமல் தொழில் நுட்பங்களை மட்டுமே கற்றுக் கொண்டு, உள்நாட்டுத் தேவையை நிறைவு செய்யும் வண்ணம் குறுகிய பரப்பில் மூலிகைபயிர் செய்ய முற்பட்டால் இன்னல்களை தவிர்க்கலாம். மூலிகை வியாபாரம் முறைப்படுத்தப்படும் நிலையில் இன்றைக்கு சுமார் ரூ. 500 கோடி என்ற அளவில் உள்ள இந்திய மூலிகை ஏற்றுமதி பன்மடங்கு பெருகி முதல் இடத்தில் உள்ள சீனா போன்ற நாடுகளுடன் போட்டியிடும் நிலையை அடையும் என்பது நிச்சயம்.

9. மூலிகை வளர்ச்சிக்கு உதவும் நிறுவனங்கள்

1. **பாரம்பரிய மருத்துவ மரபுகள் மறுமலர்ச்சி அறப்பேரவை (எப் ஆர் எல் எச் டி)**
50, எச் எம் எஸ் லேஅவுட்,
ஆனந்த்நகர், பெங்களூர் - 560 024

2. **துணை பாதுகவளர் (மரபியல்)**
பாரதி பூங்கா சாலை, கோவை - 641 043
தொலை பேசி - 2434791

3. **அந்த்யோதயா சங்**
எத்கோ மெடிஸினல் பிளாஸ்ட்ஸ்கன்சர்வேஷன்,
விடுதலைபுரம்,
லால்குடி - பாடலூர் சாலை,
திருச்சி - 760 442

4. **தமிழ் சித்தர்கள் ஹெர்பல் குரேயர்ஸ் இண்டஸ்ட்ரியல் கோ-ஆப்ரேடிவ் சொசைட்டி,**
கஸ்தூரிபவன் காம்ப்ளக்ஸ்
34 - சி, டாக்டர் நஞ்சப்பா ரோடு,
காந்திபுரம் பேருந்துநிலையம் எதிரில்
கோவை - 641 018
தொலை பேசி - 0422-2231521

5. **தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்**
தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகம்
பெரியகுளம், தேனி மாவட்டம்

6. **சி. ஐ. எம். எ. பி.**
லக்னோ, உத்தரப்பிரதேசம்

7. **தோட்டக்கலை பிரிவு**
விவசாய அறிவியல் பல்கலைக்கழகம்
ஜீ. கே. வி.கே அஞ்சல்,
பெங்களூர் - 560 065

8. **டிராப்பிகல் பொட்டானிக்கள் கார்டன் அண்டு ரிசர்ச் இன்ஸ்டிட்யுட்,**
பாலோடு அஞ்சல்,
திருவனந்தபுரம் - 695 562

9. **சென்ட்ரல் இன்ஸ்டிட்யுட் ஆப் மெடிசினர் அண்டு ஆரோமெடிக் பிளாஸ்ட்ஸ்**
ஜீ. கே. வீ. கே. அஞ்சல்,
அல்லால சந்ரா, பெங்களூர் - 560 065

10. **கோவெனன்ட் சென்டர் பார் டெவலப்மென்ட்**
38,டிபிஎம் நகர், வீரட்டிபட்டி
மதுரை - 625 010

11/**மெடிசனல் பிளாஸ்ட்ஸ் கன்சர்வேசன் சென்டர்**
ஆரோவில் சென்டர்
ஆரோவில் ஆக்ஸன் கமிட்டி,
ஆரோவில் - 605 101

12. **சி.எஸ்.எஸ்ஆர் சென்டர்**
சி.எஸ்.எஸ்ஆர், திண்டுக்கல் - 624 054

13. **முதல்வர் (டீன்)**
தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
தமிழ்நாடு விவசாயப்பல்கலைக் கழகம்
கோவை - 641 003

14. **பொட்டானிக்கல் சர்வே ஆப் இந்தியா**
தமிழ்நாடு விவசாயப்பல்கலைக் கழகவளாகம்
கோவை - 641 053

15. **வி. செல்லத்துரை,**
ஆராய்ச்சி அலுவலர்
சர்வே ஆப் மெடிசனல் பிளான்ட்ஸ் யூனிட் - சித்தா
சித்தா அரசு சித்த மருத்துவ கல்லூரி வளாகம்
திருநெல்வேலி - 627 002

16. **தலைமை நிர்வாக அலுவலர்**
மூலிகை தாவர வாரியம்
இந்திய மருத்துவமுறை மற்றும் ஹோமியோபதி துறை
இந்திய செஞ்சிலுவைக் கட்டிடம்
செஞ்சிலுவைச் சாலை
புது தில்லி - 110 001

17. **இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கி மற்றும் அதன் கிளைகள் அலுவளகங்கள்**

18. **தேசிய தோட்டக்கலை வாரியம் மற்றும் அதன் மண்டல, பிரந்திய அலுவலகங்கள்**

10. மூலிகை வியாபார நிறுவனங்கள்

1. **ஆயுர்வேத பார்மஸி லிமிடெட்**
326, பெருமாள் கோயில் வீதி
இராமநாதபுரம், கோவை - 641 045
மின் அஞ்சல் - ayurvetha @ vsnl.com

2. **உரிமாலைய டரக் கம்பெனி**
மகால், பெங்களூர் - 560 042

3. **இண்டியன் ட்ரக் அண்டு பொடானிக்கல் ஹெர்பல் கம்பெனி லிமிடெட்**
103, ராம்நகர், த.பெ.எண். 9416
திருஉட்ஸ் நகர், புது தில்லி - 110 002

4. **ஈஸ்வர் ஹெர்பல் பிரைவேட் லிமிடெட்**
பிளாட் எண். 15, பிளாக் 6, ஓரி சாலை,
முகப்பேர், சென்னை - 600 050

5. **பி.எஸ்.எஸ்.ஜி. கணேசன்**
திவாகர் அண்டு சன்ஸ்,
சி 82, 83, சிப்காட்,
தூத்துக்குடி, தமிழ்நாடு

6. **சுரபி ஹெர்போடெக் கன்சல்டென்சி அண்டு சர்வீசஸ்**
135 ஏ, பாலாஜி தெரு, அழகப்பா நகர்,
மதுரை - 625 003
தொலை பேசி எண். 0452 2694840

7. **சிவா எஸ்ஸன்சியல் ஆமில் அண்டு கெமிகல்**
டுகா காம்ளக்ஸ், 24, வீர் சகர்க்கார்
பிளாக், சாகர்ப்பூர், விகாஸ் மார்க்,
புது தில்லி - 110 092
தொலை பேசி - 2244035

8. **ஐ.பி.ஏ.அரோமெடிக் பிரைவேட் லிமிடெட்**
377, முதல்நிலை, பின்யா தொழிற்பேட்டை,
பெங்களூர் - 560 058

9. **அரோமெடிக் கெமிகல்ஸ் அண்டு ஆயில்ஸ் கம்பெனி லிமிடெட்**
டி 7, தொழிற்பேட்டை,
விசாகப்பட்டிணம் - 530 007

10. **ஏ.வி.எம்.அரோமெடிக்**
ஜி 1, தொழிற்ப்பேட்டை,
புதுக்கோட்டை, தமிழ்நாடு

11. **பார்க்கர் டிரேடிங்கார்பரேசன்**
த.பெ.எண். 190, ஸ்டாலின் ஐலண்டு
நியூயார்க் - 10314 (212), 981 - 5559,
யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்கா

12. **வோர்ல்ட் ஹெர்ப் கம்பெனி இக்க்**
459 - 18வது அவென்யு,
நியூயார்க் - 3 (நியூஜெர்சி)
யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்கா

13. **பால் மக்கள்பர்க்**
வான்டெலென் வாக் 24 டி. 2000
உறாம்பார்க் 1, ஜெர்மனி

14. **பி.பி.எஸ். ஃபிரேக்ரக்ஸ்**
20090, பக்கினால்கோ (எம் 1)
இத்தாலி,
வழி டெல்லா ரெசிஸ்டென்னா 34/எஃப்
இத்தாலி

15. **ரோஉறர் மேஸ்கென்ஸ்**
பி 7380, க்யுவெரயிக்,
பெலிஜிக், பெலிஜியம், ஐரோப்பா.

16. **டொமினியம் ஹெறர்ப் டிஸ்ட்ரிபியுட்டர்ஸ்**
இக்க் 1447 - 51,
செயின்ட் லாரன்ஸ் போல்வார்ட்
மான்ட்ரியல், கனடா.

17. **மேக்ஸோ லேபரேட்டரிஸ் பிரைவேட் லிமிடெட்**
115 ஏ, கமலாநகர், புது தில்லி -110 007

18. **மிட்டல் முஸ்லி பண்ணை மற்றும் ஆராய்ச்சிமையம்**
22 கானி சய்யது வீதி, மும்பை.
மின் அஞ்சல் - info @ mittalmusli farm.com

19. **இன்ஃபார் (இந்தியா) லிமிடெட்**
7, வட் வீதி, கல்கத்தா - 700 016

20. நிதின் ஹெர்பல்ஸ்
2192, வெஞ்சமடை,
எஸ். வி. மில்ஸ் (அஞ்சல்)
உடுமலைப்பேட்டை - 642 128

21. அருணா பிளாஷ்ட மெடிக்கா
5/96-க்யு, நேதாஜி வீதி,
அழகாபுரம், சேலம் - 636 016

23. தமிழ் சித்தர்கள் மூலிகை வளர்ப்போர் தொழில் கூட்டுறவு சங்கம்
கஸ்தூரிபவன் காம்ப்ளக்ஸ்,
டாக்டர் நஞ்சப்பா ரோடு,
கோவை - 641 018

24. அந்தியோதயா சங்கம்
7 ஏ, மிஷின் ஆஸ்பத்திரி ரோடு,
உறையூர்,
திருச்சி - 620 003

25. பசுமை உயிரியல் கட்டுப்பாட்டுமையம்
15, மெயின் ரோடு,
அம்மாபேட்டை - 638 311
தொலை பேசி - 98427 - 27087

26. சித்தர் திருவேங்கடம் ஹெர்பல் - புராடக்ட்ஸ்
கஸ்தூரிபவன் காம்பளக்ஸ்
டாக்டர் நஞ்சப்பா ரோடு,
கோவை - 641 018

27. கிராம மூலிகை கம்பெனி
50, எம்.எஸ்.எச். லே-அவுட்
2 வது நிலை, ஆனந்த் நகர்,
பெங்களூர் - 560 024

28. கணேஷ் ட்ரக்ஸ் ஹவுஸ்
72, வீரபத்ரன் தெரு,
விருதுநகர் - 626 001
தொலை பேசி - 4286

29. டி.எஸ். விஜயா அண்டு கம்பெனி
கச்சா மருந்து வியாபாரி,
159, புல்ல கோட்டம் சாலைஇ
விருதுநகர் - 626 001
தொலை பேசி - 4092

30. எம்.எஸ்.எம். சீனிவாசன் அண்டு கம்பெனி
த.பெ.எண். 45, 1/0 மக்கள் காம்பவுண்ட்,
சௌண்டம்மன் கோயில் தெரு,
திண்டுக்கல்

31. எம்.எஸ்.பி.எம். சங்குநாடார் அண்டு சன்ஸ்
இந்திய மருந்துகள் வியாபாரி,
திண்டுக்கல் - 624 001
தொலை பேசி - 6698

32. டேம்ப்கால்
சென்னை - 626 001

11. மூலிகை படிப்பு கல்வி நிறுவனங்கள்

இந்திய மருத்துவமுறைகளில் சமீபகாலம்வரை அரசு அனுமதித்த தனியார் கல்வி நிறுவனங்கள்எதும்இல்லை. சமீபகாலத்தில் அரசு அனுமதித்ததின் பேரில் கல்வி நிறுவனங்கள் தோன்றிவருகின்றன. அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் பின் வருமாறு

1. சித்தா கல்லூரிகள்

அ. அரசு சார்ந்தவை

1. **சித்தமருத்துவ கல்லூரி**
பாளையங்கோட்டை
திருநெல்வேலி

2. **சித்தமருத்துவ கல்லூரி**
அண்ணா நகர்
சென்னை

ஆ. தனியார் கல்லூரி

1. **லியோமுத்து சித்த மருத்துவ கல்லூரி**
தாம்பரம், சென்னை

2. **மூஞ்சிரை சித்தமருத்துவ கல்லூரி**
கன்னியா குமரி

2. ஹோமியோபதி கல்லூரிகள்

அ. அரசு சார்ந்தவை

1. **அரசு ஹோமியோபதி மருத்துவ கல்லூரி**
திருமங்கலம், மதுரை மாவட்டம்

ஆ. தனியார் கல்லூரி

1. **ஆர்.வி.எஸ். ஹோமியோபதி கல்லூரி**
சூலூர்

2. **லியோமுத்து ஹோமியோபதி கல்லூரி**
தாம்பரம், சென்னை

3. ஆயுர்வேதம்

அ. அரசு சார்ந்தவை - இல்லை

ஆ. தனியார்

1. **ஆர்.வி.எஸ். ஆயுர்வேத கல்லூரி**
சூலூர்

2. **லியோமுத்து ஆயுர்வேத கல்லூரி**
தாம்பரம், சென்னை

4. யுனானி

அ. அரசு சார்ந்தவை

1. **அரசு யுனானி மருத்துவ கல்லூரி**
அரும்பாக்கம், சென்னை.

12. மூலிகை மருத்துவம், தாவரம்பற்றிய நூல்கள் மற்றும் இதழ்கள்

வரிசை எண்	நூல்கள்	ஆசிரியர்	பிரசுரம், ஆண்டு
1.	அனுபவ வைத்திய முறை - 1		கன்னிமாரா நூலகப்பதிப்பு
2.	அனுபவ வைத்திய முறை - 2		"
3.	அனுபவ வைத்திய முறை - 3		"
4.	அனுபவ வைத்திய முறை - 4		"
5.	வைத்திய களஞ்சியம் (அ) விஸ்வாமித்திர வாக்கியம்		"
6.	தட்கநாயனார் வைத்திய அட்டவணை		"
7.	மாட்டு வாகடம் மற்றும் மாட்டு அங்க அடையாளம்		"
8.	பிள்ளைப்பிணி வாகடம் - 1		"
9.	பிள்ளைப்பிணி வாகடம் - 2		"
10.	சரபேந்திர வைத்திய முறை - குன்மரோக சிகிச்சை		சரஸ்வதி மஹால் நூல்நிலைய பதிப்பு
11.	- நயனரோக சிகிச்சை		"
12.	- பான்றகாமலை சிகிச்சை		"
13.	- நீரிழிவு சிகிச்சை		"
14.	- ஜன்னிரோக சிகிச்சை		"
15.	- சுகாச காச சிகிச்சை		"
16.	- வாதரோக சிகிச்சை		"
17.	- விஷ் வைத்தியம் ,,		"
18.	- வைத்திய ரத்னாவிளி		"
19.	அகஸ்தியர் 2000		"
20.	மாடுகள், குதிரைகள்,பறவைகள் இலட்சணமும்,வைத்தியமும்		"
21.	ஆனந்த காண்டம்		"
22.	சித்தமருத்துவச்சுடர்		"
23.	கர்ப்பிணி ரக்சை		"
24.	கைனமார பாரதிய		"
25.	போகர் நிகண்டு அட்டவணை		"
26.	தேரையார் மருத்துவ பாரதம்		பழனிஆண்டவர் சித்த மருத்துவ பதிப்பு
27.	தேரையார் வெண்பா உரையுடன்		"
28.	தேரையார் யமகா வெண்பா		"
29.	போகர் ஏழாயிரம் - 11		"
30.	போகர் ஏழாயிரம் - 111		"
31.	சூடாமுனி சூத்திரம்		"
32.	கருவூரார் பாலதிரட்டு		"
33.	கண் மருத்துவம்	என்.கந்தசாமி பிட்டன்	"

வரிசை எண்	நூல்கள்	ஆசிரியர்	பிரசுரம், ஆண்டு
34.	சித்த மருத்துவ வரலாறு		தமிழக அரசாங்க வெளியீடு
35.	அனுபோக வைத்திய பிரம்ம இரகசியம்	திரு.முனுசாமி முதலியார்	ஜெயம் பிரிண்டர்ஸ், மதுரை
36.	சித்த வைத்திய திரட்டு	டாக்டர் கா.நா.குப்புசாமி முதலியார் டாக்டர் கா.சு.உத்தமராயன்	(1996)
37.	நம்நாட்டு மூலிகைகள்	டாக்டர் ஏ.ஆர்.கண்ணப்பர்	மூலிகைமணி வெளியீடு
38.	வைத்திய மூலிகை அகராதி	கந்தசாமி முதலியார்	பி.ரத்னவிநாயகர் அண்டு சன்ஸ், சென்னை
39.	அகத்தியர் நூல்திரட்டு		தஞ்சாவூர் சரஸ்வதிமஹால் நூலக வெளியீடு 1996
40.	மருத்துவச் செடிகள் வளர்ப்பது எப்படி	டாக்டர் என்.பி.கிருஷ்ணமூர்த்தி எப்.ஆர்.எல்.எச்.டி.	
41.	மருத்துவச் செடிகளை பயன் படுத்துவோர் கையேடு	"	
42.	எத்னோ பாட்டணி இன் சௌத்தாசியா	ஜே.கே. மகேஸ்வரி	மில்டன் புக் கம்பெனி, 17, நியூ சர்வே ரோடு, டேராடூன் - 248 001
43.	முன்னோடி நூல்கள் (பிப்லியோ கிராபி) பிப்லியோ கிராபி ஆப் எத்னோபாட்டனி	என்.கே.ஜெயின் எட்ஆல்	பொட்டானிகள் சர்வே ஆப் இந்தியா வெளியீடு 1984
44.	மருத்துவ தாவரங்கள் - தொகுதி 1 முதல் 4வரை	ராபர்ட் பென்ட்லி எப்எல்எஸ்.,எம்ஆர்சிஎஸ். ஹென்றி டிரைவன் எம்.பி.எப்.எல்.எஸ்.	1880 பதிப்பு லண்டன்.மறு ஜே அண்டு ஏ.சர்ச்சில், நியூ பர்லிங்டன் வீதி, அச்சு 1983
45.	இந்திய மருத்துவ தாவரங்கள் - தொகுதி 1 முதல் 4 வரை	கிர்த்திகர் அண்டு பாசு 1933	லலித் மோகன் பாசு(பதிப்பாளர்) 49,லீடர் ரோடு, அலகாபாத், இந்தியா
46.	இண்டியன் மெட்டிரியா மெடிக்கா - தொகுதி 1 அண்டு 2	ஏ.கே. நாட்கானி	பாப்புலர் புக் டெப்போ 1908, 1927, 1954 மறுஅச்சு மஹேந்திரபால் சிங், 23ஏ, நியூ கேனாட் ப்ளேஸ் டேராடூன் - 248 001 -1980
47.	ஃபார்ம கிராப்பியா இண்டிகா ஏ உறிஸ்டரி ஆப் தி பிரின்சிபால் டிரக்ஸ் ஆப் வெஜிடேரியன் ஆரிஜின்	- வில்லியம் டிமோக் எட்டூர்	பாம்பே எடுகேசன் சொசைட்டிஸ் பிரஸ் மும்பை, 1890

வரிசை எண்	நூல்கள்	ஆசிரியர்	பிரசுரம், ஆண்டு
48.	முலிகைகள்	- சுதான் சுகுமார் ஜெயின் தமிழாக்கம் டாக்டர் இராம	
49.	மெடிசினல் பிளாஸ்ட்ஸ் ஆப் இண்டியா	பேராசிரியர் ரசீதுஜ்ஜாபர் எம்பார்ம், பி.எச்.டி	சிபிஎஸ் பப்ளிஷர்ஸ் அண்டு டிஸ்டிரிபியூட்டர்ஸ் 485, ஜெயின் பவன்,போலா நாத்நகர்,உஷாதேரா, தில்லி - 110 032
50.	ஃபார்மகாக்னாசி	ஜி.இ.ட்ரீஸ் ஆப் வில்லியம் சார்லஸ் ஈவானஸ்	பெய்லியர் டிரைடாக் ஆல்டன் பிரஸ் ஆக்ஸ்போர்டு டிக்ஷனரி ஆப் இண்டியன் ஃபோல்க் மெடிசின் அண்டு எத்னோபேட்டனி
51.	பாய் சன்ஸ் பிளாஸ்ட்ஸ் ஆப் இண்டியா	சர் ராம்நாத் சோப்ரா எட்ஆல்	மேனேஜர் ஆப் பப்ளிகேஷன்ஸ் ஜி.ஓ.பிரஸ், கல்கத்தா. 1949
52.	பி.எத்கோபாட்டனி ஆப் ஈஸ்டர்ன் காட்ஸ் இன்	எம. ராமராஜ் அண்டு ஏ.எல். ஹென்றி	பொட்டானிகல் சர்வே ஆப் இண்டியா. ஆந்திரபிரதேசம், இந்தியா

மருத்துவ காலமுறை இதழ்கள்

வரிசை எண்	இதழ்கள்	ஆசிரியர்	பிரசுரம் விபரம்
1.	மூலிகை மணி		மாதாந்திர இதழ்
2.	சித்த மருத்துவம்	டாக்டர் சிற்சபை	-do-பிடிஎம் பிரஸ்,காஞ்சிபுரம்
3.	மருத்துவர்	ஜி. முத்து	-do- ஜிஎம் அச்சகம், சென்னை
4.	மருத்துவர்	டாக்டர் பி.என். செல்வராசு கொல்லிமலை	-do- ஜிஎம் அச்சகம், சென்னை
5.	ஹெல்த்	ஜி. ராம்மோகன்	-do- பிலிமாலயா அச்சகம், காந்தி நகர்,மகாலிங்கபுரம் சென்னை
6.	பேமலி ஹெல்த்	டாக்டர் எம்.ஜி. வல்லபன்	-do- நியூ இந்தியா பப்ளிகேஷன்ஸ்

வரிசை எண்	இதழ்கள்	ஆசிரியர்	பிரசுரம் விபரம்
7.	மருத்துவ அறிவியல் மலர்	டாக்டர் எம். குமரேசன் திருவல்லிக்கேனி நெடுஞ்சாலை, சென்னை	
8.	சித்த உலகம்	கே. பழனிசாமி	யுனிடி பிரஸ், கோவை
9.	மூலிகை மலர்	டாக்டர் எம்.கே. சண்முகம்	பிலிமாலயா அச்சகம், சென்னை
10.	மூலிகை மருத்துவம்	டாக்டர் அக்பர் கவுசர்	யுனானி மாத இதழ்
11.	ஜோர்னல் ஆப் நான் டிம்பர் ∴பாரஸ்ட் புரட்யூஸ்	பிஷன்சிங் மஹேந்திர பால் சிங், 23-ஏ, கானாட் பிளேஸ், டெராடூன்-248 001	மூன்று மாதத்திற்குஒருமுறை
12.	இண்டியன் ஜோர்னல் ஆப் டிராம்ஷனல் நாலெட்ஜ் நேச்சுரல் இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ் கம்யுனிகேஷன்ஸ் (சி.எஸ்.ஐ.ஆர்) புது தில்லி		
13.	மெடிசினல் மற்றும் அரோமேட்டிக் பிளான்ட்ஸ் அப்ஸ்ட்ரேக்ட்ஸ் பப்ளிகேஷன்ஸ் மற்றும் இன்பர்மேஷன்ஸ் டைரக்டரேட், (சி.எஸ்.ஐ.ஆர்.) புது தில்லி		மாதமிருமுறை
14.	ஜோர்னல் ஆப் மெடிசினல் அரோமேடிக்பிளான்ட் சயின்ஸ் சென்ட்ரல் இன்ஸ்டிடியூட் ஆப் மெடிசினல் அண்டு அரோமேடிக் பிளான்ட்ஸ் த.பெ. சி.ஐ.எம்.ஏ.பி. லக்னோ - 226 015		
15.	ஜோர்னல் ஆப் எத்னோ ∴பார்மாகாலஜி இன்டர்நேஷனல் சொசைட்டி ∴பார் எத்னோ ∴பார்மாகா:லஜி மின் அஞ்சல் - asiainfo @ elsiar.com. s.g		
16.	அம்ருத்		மருத்துவ தாவரபாதுகாப்பு செசைட்டி எண். 8, முதல்தளம், 4வது மெயின் எம்.எஸ்.எச்.காலனி, ஆனந்த நகர், பெங்களூர் - 5560 024
17.	சஞ்சீவி		அந்தியோதயா சங்கம் 7 - ஏ, மிஷன் ஆஸ்பத்திரிரோடு த.பெ. எண் 216, உறையூர் திருச்சிராப்பள்ளி - 620 003 போன் - 2760443

13. சட்ட திட்டங்கள்

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 253ன்படி இந்தியா மதித்து கையெழுத்திடும் எந்த ஒரு பன்னாட்டு ஒப்பந்தமும் சட்ட பூர்வ அந்தஸ்தைப்பெறும். இந்திய மக்கள் அதனை மதித்து நடக்க கடமைப்பட்டவர் கள். இது தவிர இந்தியாவின் பாராளுமன்றத் தின் இருசபையினரால் அல்லது மாநில அரசால் தத்தம் மாநில சட்டசபைகளில் அரசியல் அமைப்பு அவைகளுக்கு அதிகாரம் வழங்கிய பொருள்கள் குறித்து சட்டங்கள் இயற்றலாம். மூலிகை தாவரங்கள் குறித்த பல்வேறு பன்னாட்டு ஒப்பந்தங்கள் மற்றும் நடைமுறையில் உள்ள சட்டங்கள் பின்வரு மாறு தொடுக்கப்படுகிறது.

1. தாவர இனங்களை அவற்றின் செறிவிடங்களான வனங்களில் இருந்து அனுமதியின்றி சேகரம்செய்வதை 1927ம் வருட இந்திய வனச்சட்டம் தடைசெய்கிறது. மாநிலங்களில் மாநில வனச்சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. தமிழகத்தில் 1882ம் வருடத்திய தமிழ்நாடு வனச்சட்டம் அமுலில் உள்ளது. வனத்துறையின் அனுமதியின்றி வனத்தில் நுழைவதோ, தாவரங்கள் சேகரம்செய்வதோ இச்சட்டப்படி குற்றமாகும்.

2. 1972ம் வருடத்திய இந்திய வனவிலங்குச் சட்டத்தில் இனைப்பு 6ல் சிலதாவரங்கள் தொகுக்கப்பட்டு கொடுக்கப் பட்டுள்ளன. இந்தத்தாவரங்களை முறையான இருப்புச்சான்று இல்லாமல் வைத்திருப்பதோ, வாங்குவதோ, விற்பதோ எடுத்துச்செல்வதோ குற்றமாகும்.

3. 1992ம் வருடத்திய வெளிநாட்டு வாணிப (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் பிரிவு 5ன்படி மத்திய அரசு நமது நாட்டின் ஏற்றுமதி இறக்குமதி கொள்கையை வகுக்கவும், கொள்கைக்கு திருத்தங்கள் கொண்டுவரவும் அதிகாரம் பெற்றுள்ளது. தற்போது 2002-2007ம் ஆண்டுக்கான இக்கொள்கையில் இறக்குமதி செய்யப்பட்ட மரங்களில் இருந்து தயாரிக்கப்பட்ட மரம் சார்ந்த பொருட்களன்றி இதர மரவகைப் பொருட்களும், சந்தன மரம்,சிவப்புச் சந்தன மரம் ஆகியவையும் 29 வகையான தாவர இனங்களும் ஏற்றுமதி செய்வது தடைசெய்யப் பட்டுள்ளது. அனைத்து வனவிதைகளும் மதிப்பூட்டப்பட்ட செஞ்சந்தன மரத்தால் செய்யப்பட்ட பொருட்களும் இதர பல பொருட் களும் அனுமதியின் பேரில் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளன.

4. 1969ம் வருட தமிழ்நாடு விற்பனை வரிச்சட்டம் ஷெட்யுல் 3ல் பாகம் 8ல் வரிசை எண் 39ல் பல மூலிகைத்தாவரங்களுக்கு விற்பனைவரி விலக்களிக்கப்பட்டுள்ளது. மேற்படி சட்டத்தின் பிரிவு 2(ஆர்)ன்படி வரவு செலவுத்தொகையில் (turnover) விவசாயிகள் நேரடியாக விற்பனை செய்யும் மூலிகைச் செடிகள் உள்ளிட்டவை வரவு செலவில் சேர்க்கப்படவில்லை. ஆகவே மூலிகை செடி விற்பனை வரிவலக்கு பெறுகிறது. மேற்படி சட்டத்தின் பிரிவு 3ன்படி ரூபாய் 3.00 இலட்சம் வரையிலான விற்பனை வரவு வரிவிலக்கு பெறுகிறது. ஆகவே இந்தத்தொகை வரை விற்பனை செய்வோர் சட்டப்படி வரிவிலக்கு பெறுகிறார்கள். எவையெல்லாம் வரிவிலக்கு பெறுகின்றன என்பது குறித்துகமிசனர், விற்பனைவரி, சென்னை அவர்கள் மேற்படி சட்டப்பிரிவு 28(2)ன்படி விளக்கம் தெரிவிக்க அதிகாரம் பெற்றவராக அறிவிக்கப்பட்டுள்ளார். ஆகவே இத்துறையில் வரிவிலக்கு குறித்த விபரம் வேண்டுவோர் நேரடியாக கமிசனரிடம் இருந்துதான் விளக்கம் பேறவேண்டும். ஏனையோர் தரும் விளக்கங்கள் சந்தேகத் திற்கு இடமில்லாத வகையில் கடைபிடிக்கத் தக்கதல்ல.

5. புதிய கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை அல்லது அறிவுசார்ந்த சொத்துரிமை பெறுவதற்கு 1970ம் வருடத்திய சொத்துரிமை (Patent) ச்சட்டம் நடைமுறையில் உள்ளது. டிசைன்கள் டிரேட்மார்க் என்று சொல்லக்கூடிய வியாபாரப்படங்கள், புத்தகக் காப்புரிமை ஆகிய வற்றிற்கு தனித்தனியே சட்டங்கள் உள்ளன.

6. சமீபத்தில் 2002ம் வருடத்திய உயிர்ப் பன்மை பாதுகாப்புச்சட்டம் ஏற்படுத்தப்பட் டுள்ளது.

7. விதைகள் உற்பத்தி, சேகரம், விற்பனை, சான்றளிப்பு போன்ற நடைமுறைகளை கட்டுப் படுத்த 1966ம்வருட விதைகள் சட்டம் நடை முறையில் உள்ளது.

14. உடனடித் தேவைகள்

மூலிகைகளைப்பற்றிய விழிப்புணர்வு உற்பத்திக்கான தொழில்நுட்பவசதிகள் போன்றவற்றை பலஅரசுதுறைகள் மற்றும் அரசுசாரா நிறுவனங்கள் மக்களுக்கு கிடைக்கச்செய்ய முயற்சி மேற்கொண்டு வரும் நிலையில் மூலிகை வளர்ப்பில் அதிக எண்ணிக்கையில் விவசாயிகளை இடுபாடு கொள்ளச்செய்யவும் விளைநிலங்களை தரி சாகவைத்திருப்பதை தடுத்து முறையான மூலிகை பயன்பாட்டிற்கு கொண்டுவரவும் உடனடியாக சில பனிகள்செய்யப்படவேண்டும்.

1. மூலிகைதாவரங்களை விற்பனை செய்வதில் உள்ள சிக்கல்களைத்தடுக்கவும் முறையான வாணிபத்தை நடைபெறவிடாமல் தடுத்துவரும் அல்லது சந்தையை இரகசியப்பொருளாகவைத்து இலாபம் சம்பாதிக்கமுயல்பவர்களை கட்டுப் படுத்தினால் பலர் இத்துறையில் இடுபாடு கொள்ளச்செய்ய வாய்ப்பு உண்டாகும். வாணிப கட்டுப்பாடுகளை தகர்க்க நாடுகள் முயன்று வரும் நிலையில் புதியதுறையான இதனை விரைவில் ஒழுங்குபடுத்தப் படாவிட்டால் திறந்த சந்தைப்பொருளாதாரம் வந்த பின்பு சந்தையை இரகசியக் கூடாரமாக பாது காக்கமுயலும் ஒருசிலரின் கை ஓங்கி விட வாய்ப்புகள் அதிகம். இத்துறையில் அதிகப் பொருளாதாரப் பெருக்கமும் வேலை வாய்ப்பு பெருக்கமும் உருவாவதை தடுக்கும் தடைக் கல்லாக இது அமையும்.

2. தனிநபர் இந்த மூலிகை வியா பாரத்தில் ஈடுபட்டு வெற்றிபெறுவ தென்பது சிரமமான காரியம். எனவே விவசாயிகளுக் கான கூட்டுறவுசேவை அமைப்புகளை ஏற்படுத்தி சந்தை நிலவரத்துக்கேற்ப உள்ளூர் தேவை மற்றும் ஏற்றுமதிப்பு வாய்ப்பு களை கணக்கில் எடுத்து முறையான ஒப்பந் தங்களை மேற்கொண்டு அந்த ஒப்பந்த அளவிற்கு ஏற்ப விவசாயிகள் மூலிகைப் பயிரிட நடவடிக்கை மேற்கொண்டால் விலை ஏற்ற இறக்கத்தால் மூலிகை உற்பத்தி யாளர்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்கலாம்.

3. மூலிகை உற்பத்தி என்பது உலகில் தோன்றும் அல்லது பரவிவரும் நோய்களின் அளவைப்பொருத்து மாறுபடும் என்பதால் நோய்தீர்க்கும் மூலிகை என்பதைவிடுத்து அன்றாட உணவாக பயன்படுத்தும்வகையில் மக்களின் உணவு பழக்கவழக்கங்களில் மாறுதல்களை புகுத்துவதன்மூலம் நோய்யற்ற வாழ்வை பலரும் பெற வழிபிறக்கும். இது இந்துறையின் வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

4. மூலிகைபாதுகாப்பு, மூலிகை விரிவாக்கம், மூலிகை உற்பத்தி, மூலிகை ஏற்றுமதிபோன்ற தொடர்புடைய அரசுதுறை யினர் ஒருங்கிணைந்து செயல்படத்தக்க வழிவகை பிறந்தால் மூலிகை பற்றிய கருத் துக்கள் சமீபகால வளர்ச்சி மற்றும் செய்தி கள் விவசாயிகளை எளிதில் சென்றடையும்

5. அவசரகால மருத்துவ உதவி தவிர்த்த ஏனைய மருத்துவ சிகிச்சை முறைகளில் மேலைநாட்டு மருத்துவ முறைகளுடன் இந்திய மருத்துவ முறைகள் ஆரோக்கியமாக போட்டியிட்டு வளரக்கூடிய சூழலை உண்டாக்குவது அவசியம். எனவே மருத்துவக் கல்வியில் மேலை நாட்டு மருத்துவ முறைகளை கற்கும் மாணவர்களுக்கு இந்திய மருத்துவ முறைகள் குறித்த அடிப்படை கருத்துகள் அடங்கிய பாடத்திட்டத்தையும், இந்திய மருத்துவ முறைகள் கற்க்கும் மாணவர்களுக்கு மேலைநாட்டு மருந்து முறைகள் குறித்த குறைந்தஅளவுப்பாடத் ' திட்டங்களையும் கொண்டுவந்தால் மருத்துவர்கள் சிகிச்சை அளிக்கும்போது கூடியஅளவு எளியமலிவான பக்கவிளைவுகளற்ற சிகிச்சையை மக்களுக்கு வழங்க வழிபிறக்கும்."உலக மக்கள் அனைவருக்கும் சுகாதாரம்" என்பது எளிதில் அடையக் கூடியதாக இருக்கும்.

6. வாணிபத்தில் அரசின் கட்டுப்பாடுகள் பெருமளவில் தளர்த்தப் பட்டுவரும் நிலையில் உலகஇயற்கை வளங்களில் தலையாயதெனக் கருதப்படும் உயிரினங்கள் பெரும்தாக்கத்திற்கு ஆட்படுவது நிச்சயம். உழைப்பின்றி உயரநினைப் போரும் சமுக சிந்தனையற்ற சுயநலவிரும்பிகளும் இந்த மரபணு சுரங்கத்தை சுரண்டி அளித்துவிடும் ஆபத்துகள் அதிகம். எனவே மக்கள் பங்கேற்பு என்பது வனஉயிரின மேலான்மையை பொறுத்தவரை மிகமிக எச்சரிக்கையாக மேற்கொள்ளப்படவேண்டிய ஒன்று. மக்களின் கல்வி அறிவு மற்றும் விழிப்புணர்வு மேம்பட்ட பின்பு வெகுகவனத்துடன் சிறுகக் சிறுக செய்யப்பட்டால் இந்த இயற்கை வளங்கள் காக்கப்படும். அதில் உள்ள மூலிகை மரபணுக்கள் நிலைத்திருக்கும். எனவே வன உயிரினம்பற்றிய கல்வி மற்றும் விழிப்புணர்வு பரவலை வேகப்படுத்துவது மிக அவசியம்.

7. மூலிகைகளின் மதிப்புக்கூட்டல், தரக்கட்டுப்பாடு இயற்கைச் சாகுபடிச் சான்றளிப்பு ஆறிவுசார்ந்த சொத்துரிமை போன்றவற்றில் உள்ள நடைமுறை செய்திகள் உழவர்கள் உணரும் வண்ணம் வெளிப்படையாக ஆங்காங்கே செய்தி சாதனங்கள் மூலமும் புள்ளி விபரம் வங்கிகள் மூலமாகவும் எளிதில் கிடைப்பதற்கு வழிசெய்தல் அவசியம்

8. அரசின் வரிவிதிப்பு, ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கை, தொழிலாளர் நலக்கொள்கை, தொழில் முதலீட்டுக் கொள்கை, கம்பெனிச்சட்டங்கள், நாட்டின் இயற்கை வளமேம்பாட்டுக் கொள்கைகள் மற்றும் சட்டங்கள் போன்றவற்றில் மாற்றங்கள் மற்றும் மறுசீரமைப்பு செய்து மூலிகை வளர்ச்சி மற்றும் வாணிபத்தை ஊக்குவிக்கும் சரத்துக்கள் கொண்டுவரப் படவேண்டும்.

9. மூலிகை பற்றிய அனைத்து செயல்பாடுகளையும் கண்காணித்து அரசின் கவனத்திற்கு கொண்டுவரக்கூடிய கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு அரசின் கொள்கை முடிவுகளுக்கு உறுதுனை புரிய வகைசெய்ய வேண்டும்.

10. இது புதிய துறை. வளர்ந்துவரும் துறை எனவே ஆராய்ச்சிப் பணிகளுக்கான வாய்ப்புகள் அதிகம். பயன் அறியப்படாத தாவரங்களோடு பயன் அறியப்பட்ட தாவரங்களில் பல, ஒரே தாவரத்தில் இடவகை வேறுபாடுகளால் தன்னுள் வேறுபாடு கொண்டு விளங்குகின்றன. இது போன்ற நிலைகளை ஆராய்ச்சிப் பணிகள் வெளிக்கொணரும். அது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பயன்தரும்.

தாவரங்களின் பண்பை வைத்து அதற்குமதிப்புட்டும் செயல்பாடுகள், மருந்து தயாரிப்பு முறைகள், நோய் தீர்க்கும் முறைகள் போன்றவற்றில் ஆராய்ச்சிப் பணிகளுக்கு வாய்ப்புகள் அதிகம். விதை நுட்பம், விவசாய சாகுபடி முறைகள், இனப்பெருக்கம், கலப்பின வகைகள் உருவாக்கம், தாவரஇரசாயன பகுப்பாய்வு போன்ற துறைகளிலும் ஆய்வுகள் செய்யபடலாம், அதற்கான வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுவது மிகமிக அவசியம்.

மனிதன் தவிர இதர உயிரினங்களும் தாவரங்களை நம்பியுள்ளன. சில நோய்களுக்காக பல மிருகங்களும் உயிரினங்களும் தாவரங்களை நம்பியுள்ளன. எனவே மிருகங்களுக்கும் தாவரங்களுக்கும் இடையே உள்ள உறவு முறையை ஆய்வு செய்வது மனித குலத்திற்கு நலம்பயக்கும். தமது செரிவிடங்களைவிட்டு பிறஇடங்களில் சாகுபடி செய்யும் பொழுது மூலிகைத் தாவரங்களின் மருத்துவ குணம் கூடவும் குறையவும் வாய்ப்புள்ளது. அதுகுறித்து ஆய்வுசெய்யலாம். சில தாவரங்கள் சில நோய்களுக்காக தொன்று தொட்டு வழிவழியாக பயன்படுத்தப்படுகின்றன. அதற்கான எவ்வித பிரதியோ எழுத்து முலஆதாரமோ இல்லை. அந்த தாவரஇனங்களை ஆய்வு செய்யலாம்.

11. வெப்பமண்டலப் பகுதியான இந்தியா ஏனைய நாடுகளின் ஆரோக்கியமான போட்டியை சந்திக்கும் நேரத்தில் தன்னிடமுள்ள மரபணுக்கள் திருடப்படாமல் பாதுகாக்க வேண்டியது மிக மிக அவசியம். அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் முழு வீச்சில் முடுக்கி விடப்படும். அதே நேரத்தில் ஏற்கனவே பாதுகாப்பு பணியில் உள்ள நிறுவனங்கள் மற்றும் அரசுதுறைகளின் செயல்பாட்டில் அக்கறை செலுத்த வேண்டுவது மிகமிக அவசியம். இல்லையெனில் பிற நாடுகள் இவற்றுக்கு உரிமை கொண்டாடி அறிவுசார்ந்த காப்புரிமைகளை பெற்றுவிட ஏதுவாகும்.

இந்த உடனடிக்காரியங்களை அரசு மட்டும் இன்றி நாட்டுநலனில் அக்கறை கொண்ட அனைவரும் ஒன்றுசேர்ந்து செய்யலாம். தற்போது தோற்றுவிக்கப்பட்டுள்ள தேசிய மூலிகை வளர்ப்பு வாரியம் மற்றும் மாநில மூலிகை வளர்ப்பு வாரியம் ஆகியவைகளை பொதுமக்கள் மூலிகை சம்பந்தமான அனைத்து காரியங்களுக்கும் அணுகி பயன் பெறலாம்.

15. தேசிய மருத்துவத் தாவரங்கள் வாரியம்

24-11-2000 அன்று வெளியிடப்பட்ட அரசின் கொள்கை முடிவிற்கேற்ப மத்திய அரசின் சுகாதார-குடும்ப நலத்துறை அமைச்சரின் தலைமையில் மருத்துவத் தாவரங்கள் வாரியம் நிறுவப்பட்டுள்ளது. மருத்துவத் தாவரங்கள் தொடர்பான அனைத்து நிகழ்வுகளையும் ஒருங்கிணைத்து, அதுதொடர்பான கொள்கைகளை உருவாக்கவும், அவற்றைப் பாதுகாப்பதற்குத் தேவையான உக்திகளை வகுக்கவும், பணப்பயன் தரக்கூடிய தாவரங்களை பயிரிடுதல், முறையானபயிர் அறுவடை செய்தல், ஆய்வு மற்றும் வளர்ச்சிப்பணிகள் மேற்கொள்ளல், பதப்படுத்துதல், மூலப்பொருள்களை உருவாக்குதல், சந்தை நிலவரம் ஆகியவை பற்றிய கொள்கை வரைவுகள் தயாரித்தளிக்கவும் பொறுப்பான ஒரு நிறுவனத்தை உருவாக்குவதே இவ்வாரியம் நிறுவப்பட்டுள்ளதன் நோக்கமாகும். இவ்வாறு வரையறுக்கப்பட்ட செயல் திட்டங்களின் படி சம்பந்தப்பட்ட அரசின் துறைகளும் நிறுவனங்களும் தத்தம் பணிகளைத் தொடர்ந்து செய்யும் அளவில் அவற்றின் செயல்பாடுகளை மையப்படுத்தி நெறிப்படுத்துவதாக இவ்வாரியத்தின் பணிஅமையும்.

வாரியச்செயல்பாடுகள் :

அமைச்சகங்கள் அரசுத்துறைகள் நிறுவனங்கள் மாநில / மைய அரசின் எல்லைக்குட்பட்ட அரசுகள் ஆகியவற்றோடு ஒருங்கிணைந்து செயல்பட்டு மருத்துவத் தாவர வளர்ச்சிக்குப் பொதுவாகப் பாடுபடுவதோடு குறிப்பாகக் கீழ்க்கண்ட முக்கியப் பணிகளையும் மேற்கொள்ளல்.

1. உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் மருத்துவத் தாவரங்களில் தேவை / வழங்கல் நிலையை மதிப்பிடல்.

2. சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் / துறைகள் / அமைப்புகள் / மாநில மத்திய அரசின் எல்லைக்குடபட்ட அரசுகளுக்கு மருத்துவ தாவரங்களின் மேம்பாடு தொடர்பான செயல்முறைத் திட்டங்களின் கொள்கை முடிவின் மிது தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.

3. தகுதியுள்ள முகமைகள் மூலமாக பயிரிடப்பட வேண்டிய நிலங்களைத் தேர்வுசெய்தல், மூலப்பொருள்களைத் திரட்டுதல், பாதுகாத்தல் மற்றும் மருத்துவச்செடிகள் போக்குவரத்துக்கான ஏற்பாடுகள் செய்தல் ஆகியவை தொடர்பான கருத்துரு, திட்டங்களைத் தயாரிப்பதற்கு வழிகாட்டுதல்.

4. மருத்துவத்தாவரங்களை இனம்காணுதல், அட்டவணைப்படுத்துதல், அளவு மதிப்பிடல்.

5. மருத்துவத்தாவரங்களின் பிறப்பிட மற்றும் வளரிடப்பராமரிப்பை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்.

6. மருத்துவத்தாவரங்களை வளர்போருக்கும் சேகரிப்போருக்கும் இடையே நல்லுறவை வளர்த்தல், மூலிகைகளைப் பாதுகாத்தல், விற்பனைக்குப் போக்குவரத்து ஏற்பாடுசெய்தல், விளைச்சலுக்கு சந்தையில் நல்ல விலை கிடைக்கச் செய்தல்.

7. மூலிகை விவரக்குறிப்புகள் தயாரித்தல், அத்தகவல்களைப்பரப்புதல், மக்களிடையே அதிகச்செல்வாக்குடைய மருத்துவப்பயன்பாடுள்ள மருத்துவத்தாவரங்களுக்கு காப்புரிமைத் தடைபெறப்பட்டுள்ளதை விளம்பரப்படுத்துதல்.

8. மூலப்பொருள்கள் இறக்குமதி / ஏற்றுமதி, அதிக மதிப்புள்ள பொருள்களான மருந்துகள், துணை உணவுகள் அல்லது அழகு சாதன மூலிகைப்பொருள்கள் ஆகியன தயாரித்தலில் மேம்பட்ட தொழில் நுணுக்கத்தை கையாண்டு தரமான மற்றும் நம்பத்தகுந்த தயாரிப்புகளுக்கு உள்நாட்டு/ வெளிநாட்டுச் சந்தையில் நல்ல வரவேற்பைப்பெற உதவுதல்.

9. மூலிகை சம்பந்தப்பட்ட அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் பயன்பாடு உள்அடக்கிய உயராய்வுப் படிப்புகளையும் பட்டங்களையும் வழங்குதல்.

10. பயிரிடுதலிலும் தர நிர்ணயம் செய்வதிலும் மரபுச்சீர்மையை (Protocol) உருவாக்குதல்.

11. காப்புரிமை மற்றும் பயன்பாட்டுரிமையை பாதுகாத்துக்கொள்ளவும் அறிவுசார் பொருட்களின் காப்புரிமையைப் பெறவும் ஊக்குவித்தல்.

நிறுவன அமைப்பு :

இக்கழகத்தின் உயர்மட்டக்குழு, மைய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், அத்துறையின் இணைஅமைச்சரைத் துணைத் தலைவராகவும் கொண்டதாகும்.

அலுவல் சாரா உறுப்பினர்கள் :

1. செயலாளர், இந்திய மருத்துவ முறைகள் - ஒமியோபதித்துறை.
2. செயலாளர், சுற்றுச்சூழல் - வனத்துறை
3. செயலாளர், அறிவியல் - தொழில் ஆராய்ச்சித்துறை
4. செயலாளர், நுண் உயிரியத் தொழில் நுட்பத்துறை.
5. செயலாளர், அறிவியல் - தொழில் நுட்பத்துறை
6. செயலாளர், வர்த்தகத்துறை
7. செயலாளர், தொழில் கொள்கை- மேம்பாட்டுத்துறை
8. செயலாளர், செலவினத்துறை
9. செயலாளர், விவசாயம் - கூட்டுறவுத்துறை
10. செயலாளர், வேளாண்மை ஆராய்ச்சி - கல்வித்துறை
11. செயலாளர், பழங்குடியினர் நலத்துறை.

நியமன உறுப்பினர்கள் - கீழ்க்காணும் துறைசார் தொழில் நுட்பவல்லுனர் நால்வர்.

1. மானிட மருத்துவத்தாவரவியல்
2. இந்திய மருத்துவமுறை மருந்து தயாரிப்பு நிலையங்கள்.
3. சந்தை மற்றும் வர்த்தகம்

கீழ்க்காணும் மருந்து ஏற்றுமதி சார்ந்த நியமன உறுப்பினர்கள் நால்வர்

1. இந்திய மருத்துவம் மற்றும் ஒமியோபதி மருந்துகள்.
2. அரசு சாரா நிறுவனங்கள்
3. மருத்துவத்தாவரங்கள் பயிர்வளர்ப்போர்
4. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் தொழில் குழுமங்கள்

கீழ்க்காணும் முகமைமிலிருந்து இரண்டு நியமன உறுப்பினர்கள் :

மருத்துவத் தாவரங்களைக் கையாளும் இணையம் / கூட்டுறவு நிறுவனம் ஆகியவற்றிலிருந்து இரண்டு நியமன உறுப்பினர்கள்.

கீழ்க்கண்ட ஆராய்ச்சிக் கழகத்திலிருந்து ஒருவர் :

1. இந்திய மருத்துவம் மற்றும் ஒமியோபதி ஆராய்ச்சி கழகங்கள்.

2. இந்திய முறை மருந்துகள் தயாரிப்புக்கூடம் / ஒமியோபதி மருந்துகள் தயாரிப்புக்கூடம், காசியாபாத்.

மாநில அரசுகளால் நியமிக்கப்படும் இரு உறுப்பினர்கள் :

(இரு வருடங்களுக்கு ஒருமுறை சுழற்ச்சி முறையில்)

முதன்மைச் செயல் அலுவலர் : உறுப்பினர் - செயலர் எனும்பெயரில் அரசு இணைச்செயலர் பதவிக்கு இணையான தகுதியில் இருப்பார்.

வாரியத்தின் செயல்பாடுகள்

வாரியம் ஆரம்பிக்கப்பட்டு ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் நிறைவுபெற்றுள்ளது. வாரியம் மூலிகைத் தாவரங்களின் வளர்ச்சிக்காக பலவிதமான திட்டங்களை அறிவித்து நிதி உதவி செய்து வருகிறது. மேம்பாட்டு திட்டங்கள், வணிகத்திட்டங்கள் என்ற இரண்டு பிரிவுகளாக நிதி வசதி செய்யப்படுகிறது. அரசு நிறுவனங்கள், பதிவு பெற்ற பயிர்வளர்ப்போர் அமைப்பு, பயிர் வளர்ப்போர் இணையம், வர்த்தகர்கள், உற்பத்தியாளர்கள் சங்கங்கள், மருந்து தயாரிப்பு நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் அங்கிகாரம் பெற்ற தனியார் ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் மருத்துவத் தாவரங்கள் பிரிவில் கடந்த மூன்றாண்டுகளாக அனுபவம் பெற்றவர்கள் அடங்கிய குழுவினர் முதலானோர் நிதியுதவி பெற தகுதியுடையோர் ஆவர்.

திட்டக்கருத்துரு தயாரிக்கும்முறை, படிவங்கள் குறித்த கையேடு வாரியத்தால் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன.

தேசிய மருத்துவத்தாவரங்கள வாரியத்தை தொடர்ந்து தமிழ் நாட்டில், தமிழ்நாடு மூலிகைத்தாவரங்கள் வாரியம் செயல்பாட்டிற்கு வந்துள்ளது.

தேசிய மற்றும் தமிழக மருத்துவத் தாவரங்கள் வாரியங்களின் முகவரி பின் வருமாறு

---

1. **முதன்மைச் செயல் அலுவலர்**
தேசிய மூலிகைத் தாவரங்கள் வாரியம்
இந்திய மருத்துவ முறைகள் மற்றும்
ஓமியோபதித்துறை,
இந்தியஅரசு,
சந்திரலோக் கட்டிடம்
36, ஜன்பத், புது தில்லி - 110 001
தொலைபேசி - 011 - 3319360
011 - 3319255
தொலை நகல் - 011 - 3319360
E mail : nmpb22@ indiatimes.com

Chief Executive Officer
National Medicinal Plants Board,
Dept. of ISM & H,
Government of India
Chandralok Building
36, Janpath, New Delhi - 110 001
Tel : 011-23319360, 23319255
Fax : 011- 23319360
E mail : nmpb22@ indiatimes.com

2. Commissioner,
Tamilnadu Medicinal Plants Board,
ISM & H,
Arignar Anna Govt. Hospital Campus,
Arumbakkam,
Chennai - 600 106
Tel : 044-26214718, 26216244
Fax : 044-26206223

கமிசனர்,
தமிழக மருத்துவத்தாவரங்கள் வாரியம்
இந்திய மருத்துவ முறைகள் மற்றும்
ஓமியோபதித்துறை,
அறிஞர் அண்ணா மருத்துவமனை வளாகம்,
அரும்பாக்கம்,
சென்னை - 600 106
தொலைபேசி - 044-26214718
தோலைநகல் - 044-26206223

ஏற்றுமதி தடைசெய்யப்பட்டவை

Prohibited (not permitted to be exported)

1. All forms of wild animals including their parts and products.
2. Exotic birds except the following
   - Albino Budgerigars
   - Budgerigars
   - Bengali Finches
   - Zebra Finches
   - Jawa Sparrow
3. Sea shells
   - Trochus Niloticos
   - Turbo Species
   - Lamnis Species
   - Tridacna Gigas
   - Xancus Pyrus
4. Peacock tail feathers including handicrafts and articles made thereof.
5. Manufactured articles and shavings of shed antlers of Chital and Sambhar.
6. All items of plants included in Appendix I and Appendix II of the Convention on International Trade in Endangered Species (CITES) wild orchid as well as, plants as specified below at serial no.11.
7. Tallow, fat and / or oils of any animal origin excluding fish oil.
8. Wood and wood products in the form of logs, timber, stumps, roots, bark, chips, powder, flakes, dust, pulpand charcoal except sawn timber made exclusively out of imported logs / timber (subject to conditions for the time being in force)
9. Sandalwood in any form, but excluding
   (i) Finished Handicraft products of sandalwood
   (ii) Machine finished sandalwood products
   (iii) Sandalwood oil
10. Red Sanders wood in any form, whether raw, processed or unprocessed, except value added products of Red Sanders wood.
11. Plants, plant portions and their derivatives and extracts
    1. Baddomes cycad *(Cycds beddomei)*
    2. Blue vanda *(Vanda coerulea)*
    3. Saussurea costus
    4. Ladies slipper orchid *(Paphiopedilium species)*
    5. Pitcher plant *(Nepenthes khasiana)*
    6. Red vanda *(Renanthera imschootiana)*
    7. Rauvolfia serpentina *(Sarpagandha)*
    8. *Ceropegia species*
    9. *Frerea indica* (Shindal Mankundi)
    10. *Podophyllum hexandurm* (emodi)(Indian Podophyllum)
    11. *Cyatheaceae species* (Tree Ferns)
    12. *Cycadacea species* (Orchids)
    13. *Dioscorea deltoidea* (Elephant's foot)
    14. *Euphorbia species* (Euphorbias)
    15. *Orchidaceae species*
    16. *Pterocarpus santalinus* (Redsanders)
    17. *Taxus wallichiana* (Common Yew or Birmi Leaves)
    18. *Aquilaria malaccensis* (Agarwood)
    19. *Aconitum Species*

20. *Coptis teeta*
21. *Coscinium fenestrum* (Calumba wood)
22. *Dactylorhiza hatagirea*
23. *Gentiana kurroo* (Kuru, Kutki)
24. *Gnetum species*
25. *Kampheria galenga*
26. *Nardostachys grandiflora*
27. *Panax pscudoginseng*
28. *Picrorhiza kurrooa*
29. *Swertia chirata* (Charayatah)

இணைப்பு - 2

அனுமதியின்பெயரில் ஏற்றுமதி செய்யத்தக்கவை

Restricted : Exports permitted under licence.

1. Exotic Bird - Jawa Sparrow
2. Fish and frozen silver Pomfrets
3. Beche-mer
4. Sea shells, excluding polished sea shells and handicrafts made out of sea shells of all species (excluding those prohibited)
5. Seeds and planting materials :
   (i) Cashew seeds and plants
   (ii) Jute Seeds
   (iii) Egyptian clover (Barseem) Trifolium alaxtum seeds
   (iv) Nux vomica seeds / bark / leaves / roots and powder thereof
   (v) Onion seeds
   (vi) Seeds of ornamental plants (wild variety)
   (vii) Paddy seeds (wild variety)
   (viii) Pepper cutting or rooted cutting or pepper
   (ix) Red sanders seeds (Pterocarpus santalinus)
   (x) Rubber seeds
   (xi) Russa grass seeds and tufts
   (xii) Seeds of all forestry species
   (xiii) Sandalwood seeds (Santalum album)
   (xiv) Saffron seeds or corms (planting material for saffron)
   (xv) Wheat seeds (wild variety)
   (xvi) Neem seeds
6. Sea weeds of all types, including Gedulis but excluding brown sea weeds and agarophytes of Tamil Nadu Coast origin in processed form
7. Sandalwood De-oiled spent dust
8. Sandal wood chips
9. Value added products of Red Sanders wood
10. Silkworms, silkworm seeds, silk worm cocoons
11. Pulp of wood or of other Fibrous Cellulosic Material; Waste and Scrap of Paper, Paper board, Waste papeer.

இணைப்பு - 3

விற்பனை வரி விலக்களிக்கப்பட்டவை

Medicinal herbs and country drugs including roots in fresh or dried form as notified by Government.

1. Pipercubebalinn
2. Kaempeeria- galang
3. Tribulus- Terrestrusliom
4. Voodfordia fruiticosa kura
5. Acontium- Hterrophyllumwall
6. Quercus infectoria Oliv
7. Mangolia Fuscata Andr
8. Somolocis Racemosa Roxb
9. Indigo fera - Tinctoria Linn
10. Boerhaavia Diffuse Linn
11. Nellikai
12. Thippilli
13. Cassia Flower
14. Galangal roots
15. Big Galangal roots
16. Karbogsari
17. Hemidusmus
18. Calamus root
19. Gymnena Sylvestra
20. Sarja Rasam (Daranarbatu)
21. Bound nut
22. Black cumin
23. Athimathuram (Clyzorriha or Liqurice roots)
24. Nellap panai kizangu
25. Andrographic paniculat
26. Mulaippal vidhai
27. Andropogan Murricats, Osxillium Savivum, Satavaari, Bashop Weed, dall seeds, Withania Somnifetra, Benjamine, Pomogranit Shell, Vilvapazham, vlampazham, siruthekku, pippra moolam, patakam, stramonium seeds, saraswathi leaves, thulasi leaves, stone flower, vempadampattai, (Hybiscus, Kasthuri Turmeric and Kasini keerai powders) Senna leaves, pods and cassia leaves and Vinca rosa (Nithya Kalyani) leaves and roots.

இணைப்பு - 4

வன உயிரின சட்டப்படி அனுமதியின்றி வைத்திருக்க இயலாத தாவரங்கள்

1. Cycas beddomei
2. Vanda coerulea
3. Sanssurea lappa
4. Paphiopedilum spp
5. Nepenthes khasiana
6. Rananthera inschotiana

இணைப்பு - 5

ஆபத்துக்கு ஆட்பட்ட உயிரினங்களின் வர்த்தகம் தொடர்பான பன்னாட்டு கூட்டமைப்பின் கீழ் கொணரப்பட்ட தாவரக்குடும்பங்கள்

Appendix I	Appendix II	Appendix III
AGAVACEAE	AGAVACEAE	AGAVACEAE
	AMARYLLIDACEAE	
APOCYNACEAE	APOCYNACEAE	
	ARALIACEAE	
ARAUCARIACEAE		
	VEREERIDACEAE	
	VROMELIACEAE	
CACTACEAE	CACTACEAE	
	CRASSULACEAE	
CUPRESSACEAE		
CYCADACEAE	CYCADACEAE	
	DIAPENSIACEAE	
	DICKSONIACEAE	
	DIDEREACEAE	
	DIOSCOREACEAE	
	CROSERACEA	
ELIPHORBIACAE	EUPHORBIACEAE	
FOUQUIERIACEAE	FOUQUIERIACEAE	
		GNETACEAE
	JUGLANDACEAE	
LEGUMINOSAE	LEGUMINOSAE	LEGUMINOSAE
LILIACEAE	LILIACEAE	
		MAGNOLIACEAE
		MELIACEAE
NEPENTHACEAE	NEPENTHACEAE	
ORCHIDACEAE	ORCHIDACEAE	
	OROBANCHACEAE	
	PALMAE	
		PAPAVERACEAE
PINACEAE		
PODOCARPACEAE		
	PORTULACEAE	
	PRIMULACEAE	
	PROTEACEAE	
	RANUNPULACEAE	
	ROSACEAE	
RUBIACEAE		
SARRACENIACEAE		
	SCROPHULARIAEAE	
STANGERIACEAE	STANGERIACEAE	
	TAFACEAE	
		TROCHODENDRACEAE
	THYMELAEACEAE	THYMELAEACEAE
	VALERIANACEAE	
	WELWITSCHIACEAE	
ZAMIACEAE	ZAMIACEAE	
	ZINGIBERACEAE	
	ZYGOPHYLLACEAE	

மாநில மூலிகைத் தாவரங்கள் வாரியத்துடன் பதிவு செய்வதற்கான விண்ணப்ப படிவம்

STATE MEDICINAL PLANTS BOARD

APPLICATION FOR GRANT OF CERTIFICATE OF REGISTRATION / RENEWALAS MEDICINAL PLANTS COLLECTOR (S) / FARMER(S) / TRADER(S)

1. a) Name of the applicant(s)/contact person (in block letter)
   b) Status (Individual/firm/company/society/association/contractor/Govt. undertaking)
   c) Date of establishment/ engagement in the field of medicinal plants (trader enclose profile, if any)
   d) Fresh or renewal, if renewal, give previous year's certificate
   e) Amount and details of fee remitted
   f) If already registered, furnish details with the name of the state and agency GO or NGO (attach copy of registration)
2. a) Address in full of the place(s) of storage/shop/processing plant/unit(s) etc., if any
   b) Telephone, fax and E-mail number(s)
3. Whether A) Collector ; B)Farmer ; c) Trader ; (Mention specifically)

A. COLLECTOR(s):

4. Items of medicinal plants /parts/products collected (furnish details including aprox. Quantity collected in following table):

S. No	Name of herb (s)	Botonical name	Area of collection with Dist / forest Div.	Approx. Quantity (kg)
1				
2				
3				

5. Are you an authorized collector of medicinal plants? (With permission of Govt. or other authorized body)
6. Years during which the application was in possession of Board's certificate of registration (for renewal only)
7. Whether collected product supplied under some brand name(s)/trade mark(s)
8. Medicinal plants material collected and supplied i.e. raw/semi processed or processed during last 03 years.

S. No	Year	Name of species collected	Area from where collected	Approx. Quantity (kg)	To whom supplied (kg)
1	200 to 200				
2	200 to 200				
3	200 to 200				